2019 - இதழ் 12

இலவசம்

# உள்ளான மனிதன்

GRACE TABERNACLE
APOSTOLIC CHURCH

gtachurch.ca

# உள்ளான மனிதன்

மாதாந்த சஞ்சிகை - இலவசம்

2019 - இதழ் 12

**இயேசு சொன்னார்:**

**வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.**

## கிரேஸ் (ற்)ரபனக்கல்

## வெளியீடு

SCARBOROUGH, ONTARIO, CANADA ☎ 416.613.2909

(f)பின்ச் / மிட்லான்ட் சந்திப்புக்கு அருகில்

நீங்கள் தற்போது கிறிஸ்தவ **ஆவிக்குரிய** ஐக்கியமொன்றிலே இணைந்திருந்தால், அங்கே கருத்தோடு தேவனை சேவித்து, உங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்தி, இயேசு கிறிஸ்துவுக்குள், உங்களைக் குறித்ததான பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுங்கள்.

# இந்த இதழில்...

**2019 - இதழ் 12**


## 4 நமக்கொரு பாலகன் பிறந்தார்

இந்த உலகமானது இரண்டு பேரை சந்திக்க மிக வேக மாக அந்த நாளுக்கென்று ஆயத்தமாகுகின்றது. தேவனு டையவர்கள் இயேசுகிறிஸ்து வரும் நாளுக்காகத் தங் களை ஆயத்தம் செய்கின்றார்கள்.

## 6 மனநிலை!

உங்கள் வாழ்க்கையில் நீங்கள் சந்திக்கும் தனிப்பட்ட தும் பிரத்தியேகமானதும், யாருக்கும் விளக்கிக் கூற முடியாததுமான சூழ்நிலைகள் உங்கள் வாழ்க்கையில் இருக்கலாம். உங்கள் வாழ்க்கையில் உள்ள சிரமங்க ளையும், நீங்கள் எதிர்நோக்கும் சவால்களையும், உங் கள் மனநிலையையும் தேவன் அறிவார்.

## 10 பிரசங்கக் குறிப்புகள்

கிறிஸ்துவை அறியாத நாட்களிலே நாங்களும் இரு ளின் அதிகாரத்திற்கு உட்பட்டிருந்தோம். தேவனுடைய பெலன் வெளிப்பட்டபோதோ, ஒரு கணப்பொழுதிலே அவர் எமக்கு இரட்சிப்பைக் கொடுத்தார்.

## 12 புதிய நாளுக்குள்...

கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.



**கிறேஸ் (ற்)ரபனக்கல்**

**210 Silver Star Blvd., Unit #807**
**Scarborough, ON M1V 5J9 Canada**

☎ 416.613.2909 info@gtachurch.ca



gtachurch.ca

# புதிய நாளுக்குள்...

அனுதின தியானக் குறிப்புக்கள்

## தலைப்பு அகராதி

12ம் பக்கத்திலிருந்து...

**மனக்குழப்பமான, சோர்வான நேரங்களில்**
... மார்கழி 1, 3, 5, 6, 10, 15, 23, 26, 28

**போராட்டங்களில், பிசாசின் தந்திரங்களில் வெற்றி**
... மார்கழி 1, 2, 3, 5, 8, 10, 13, 20, 28

**பாவத்திலிருந்து விடுதலையடையும் வழி உண்டு**
... மார்கழி 8, 15, 18, 20, 27, 29

**முக்கிய தீர்மானங்களை எடுக்கும் முன்**
... மார்கழி 2, 4, 5, 7, 10, 11, 13, 14, 17, 29

**சமரசமான வாழ்க்கை வேண்டாம்**
... மார்கழி 4, 5, 10, 12, 27, 29

**தெய்வீக ஆசீர்வாதங்கள்**
... மார்கழி 9, 14, 22, 25, 28, 30, 31

**தேவனுடைய சித்தம் நிறைவேறட்டும்**
... மார்கழி 5, 19, 24, 25, 26

**தேவனுக்குப் பிரியமான வாழ்க்கை**
... மார்கழி 4, 5, 6, 7, 9, 10, 14, 19, 20, 21, 22, 24, 25, 30, 31

**சமாதானமும் அமரிக்கையுமான வாழ்க்கை உண்டு**
... மார்கழி 7, 9, 15

**பொறுமையோடு காத்திருங்கள்**
... மார்கழி 2, 13, 28

**தேவ நீதி வெளிப்படும்**
... மார்கழி 2, 21, 26

**திவ்விய சுபாவங்கள் வெளிப்படட்டும்**
... மார்கழி 7, 9, 11, 19, 22, 24, 25, 30, 31

**வாழ்வு தரும் திருவசனம், ஐக்கியத்தின் மேன்மை**
... மார்கழி 8, 11, 12, 16, 18, 23, 26, 28, 29, 31

**மேட்டிமை, வன்மம், பகை தலைதூக்கும் போது...**
... மார்கழி 20, 22, 27, 30

# நமக்கொரு பாலகன் பிறந்தார்
# நமக்கொரு குமாரன் கொடுக்கப்பட்டார்

*போதகர் ரஞ்சிற் கொன்ஸ்ரன்ரைன்*

இயேசு கிறிஸ்துவின் பிறப்பை நினைவு கூர்ந்து கொண்டாடும் மாதமாக மார்கழி மாதம் விளங்குகின்றது. கிறிஸ்தவ நாட்காட்டியில் பல நிகழ்வு கள் ஒவ்வொரு வருடத்திலும் நினைவு கூரப்படுகின்றன. இவை அவசிய மானதா என்ற கேள்வி சில மனிதர்களின் உள்ளத்தில் எழும்புவதுண்டு.

இவையாவும் எமக்கு தேவையானவையே. இந்த நிகழ்வுகள் ஒவ்வொன் றும் மனுக்குலத்தின் மீட்ப்பைக் குறித்து அவை நடைபெறுவதற்கு பலநூறு ஆண்டுகளுக்கு முன்பதாக தேவன் தமது ஊழியர்களாகிய தீர்க்கதரிசிகளின் மூலம் அறிவித்ததும், அத்தீர்க்கதரிசனங்களை அறிந்த வர்கள் மீட்பின் வருகையை எதிர்பார்த்து காத்திருந்திருதவையுமாம்.

இந்நிகழ்வுகளை நினைவுகூரும் போது, பிதாவாகிய தேவனின் வாக்கு த்தத்தத்தின் நிறைவேறுதலையும் அவர் மனுக்குலத்திற்குக் காண்பித்த அவரது அன்பையும் இரக்கங்களையும் கிருபைகளையும் கொண்டாடுகி ன்றோம்.

இயேசு கிறிஸ்துவின் பிறப்பானது தேவனால் தீர்க்கதரிசனமாய் அறிவிக் கப்பட்டதொன்று. மனுக்குலத்தை பாவத்திலிருந்து விடுவிக்கவும், சாபத் தின் வேரறுத்து அவர்கள் தேவ ஆசீர்வாதங்களை சுதந்தரித்துக் கொள் ளவும்,அவர்களைத் தேவ பிள்ளைகளாக்கவுமே கர்த்தராகிய இயேசு இப் புவியில் பிறந்தார்.

தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரன் இயேசுகிறிஸ்துவை விசுவாசி க்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும் படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்ப டுவதற்காகவே அவரை அனுப்பினார் என்று பரிசுத்த வோதாகமத்திலே இயேசு கூறியுள்ளதைக் காண்கிறோம்.

எனவே இயேசுகிறிஸ்துவின் பிறப்பைக் கொண்டாடுவதன் நோக்கமானது தேவன் எமக்கு காண்பித்த அவரது அன்பையும் அவர் எமக்கு உண் டுபண்ணியுள்ள அவரது இரட்ச்சிப்பையும் உயர்த்தி அவருக்கு நன்றி சொல்லுவதாகும்.

## இந்த உலகமானது இரண்டு பேரை சந்திக்க மிக வேகமாக அந்த நாளுக்கென்று ஆயத்தமாகுகின்றது.

தேவனுடையவர்கள் இயேசுகிறிஸ்துவானவர் வரும் நாளுக்காகத் தங் களை ஆயத்தம் செய்கின்றார்கள். மற்றவர்களோ அறிந்தோ அறியா மலோ அந்திகிறிஸ்துவின் நாளுக்கென்று தம்மை ஆயத்தப்படுத்துகின் றார்கள்

நித்திய ஜீவனை விரும்புகின்ற ஒவ்வொருவரும் அதை அடை ந்துகொள்ளும்படி கிறிஸ்துவின் நாளுக்காக ஆயத்தப்படுவது இன்றியமையாத தொன்றாகும்.

கிறிஸ்துவின் நாளுக்கென்று ஆயத்தப்படுபவர்கள் அந்நாளிலே துப்பரவானவர்களும் இடறலற்றவர்களுமாய் காணப்படும்படி ஆயத்தப்பட வேண்டும்.

இயேசுகிறிஸ்துவின் பிறப்பைக் கொண்டாடும் நாங்கள் துப்பரவானவர்களும் இடறலற்றவர்களுமாய் தேவன் தந்த பரிசுத்த வாழ்க்கையை வாழ்ந்து இயேசுவின் பிறப்பை மனமகிழ்சியுடன் கொண்டாட வேண்டும்.

நமக்கு ஒரு பாலகன் பிறந்தார், நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார், கர்த்தத்துவம் அவர் தோளின்மேலிருக்கும், அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக்கர்த்தர், வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப்பிரபு என்னப்படும் என்று தீர்க்கதரிசி மூலமாய் தேவன் இயேசுவின் பிறப்பை எமக்கு அறிவித்தார்.

மேலும், தேவதூதன் மரியாளிடத்தில் அவர் பிறப்பைக் குறித்து கூறும்போது, இதோ, நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக. அவர் பெரியவராயிருப்பார், உன்னதமானவருடைய குமாரன் என்னப்படுவார் என்று கூறினான்.

பெரியவரும் உன்னதமானவருடைய குமாரனுமான இயேசு அதிசயமானவரும், ஆலோசனைக்கர்த்தரும், வல்லமையுள்ள தேவனும், நித்திய பிதாவும், சமாதானப்பிரபுவுமானவர்.

எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தையுடைவரான இயேசுவின் பிறப்பை எல்லா நற்பண்புகளுடனும் கொண்டாடுவோமாக.

பிரியமான சகோதரனே சகோதரியே,

இயேசு சிறுமைப்பட்டவர்களுக்கு நற்செய்தியை அறிவிக்கின்றார், இருதயம் நொறுங்குண்டவர்களுக்குக் காயங்கட்டுகின்றார், சிறைப்பட்டவர்களை விடுதலையாக்குகின்றார், கட்டுண்டவர்களை கட்டவிழ்க்கின்றார். அவரை நோக்கிக் கூப்பிடு. அவர் பதில்தரும் தெய்வம். எனக்கு நன்மையளிப்பார்.

**எம்மோடு கூட ஜெபிக்க விரும்பினால் ஞாயிறு காலை 10:00 மணிக்கு தேவ ஆராதனையில் கலந்து கொள்ளும்படி உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.**

## கிருபையின் கூடார அப்போஸ்தல சபை

**ரொரன்ரோ, கனடா ☎ 416.613.2909**

# மனநிலை!

என்ன செய்வது போதகர் ஐயா அவர்களே, ஊரிலே இசையை நன்றாக கற்றுக் கொடுக்கும் ஆசிரியர் ஞாயிறு காலையில்தான் வகுப்புக்களை எடுக்கின்றார். ஆதலால் காலை ஆராதனைக்கு வரமுடியவில்லை. இரண்டு வருடங்களுக்குள் வகுப்புக்கள் எல்லாம் முடிந்து விடும். பின்பு அவன், ஆலயத்தில் நேர்த்தியாக வயலின் வாத்தியத்தை வாசிக்க முடியும். அதுவரைக்கும் எங்கள் வசதிக்கு ஏற்றபடி மாலை ஆராதனையுள்ள ஒரு ஆலயத்திற்கு செல்வதற்கு தீர்மானித்திருக்கின்றோம். ஞாயிறு காலை இல்லை என்றால் மாலை ஆராதிப்பதில் என்ன தவறு? என்று பல வருடங்களாக ஆலயத்தில் அங்கத்தவராக இருந்த ஒரு மனிதன் போதகரிடம் கூறினார். நல்லது சகோதரனே, நீங்கள் இந்த ஆலயத்திலிருந்தாலும், வேறு ஆலயத்திற்கு சென்றாலும், இந்த நாட்டில் இருந்தாலும், வெளிநாட்டிற்கு சென்றாலும், தேவனை ஆவியோடும் உண்மையோடும் ஆராதியுங்கள். பரம பிதாவின் சித்தத்தை உங்கள் வாழ்வில் நிறைவேற்றுங்கள். முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் நீதியையும் தேட வேண்டும் என்ற மனநிலையை உங்கள் பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுக்க மறந்து போய்விடாதிருங்கள் என்று சாந்தமான தொனியுடன் வயதான போதகர் பதிலளித்தார்.

அருமையான சகோதர சகோதரிகளே, மேலே கூறப்பட்ட சம்பவத்தை சற்று சிந்தித்துப் பாருங்கள். இந்தத் தலைப்பில் ஒரு பட்டிமன்றத்தை நடத்தினால், "இதில் எந்தத் தவறும் இல்லை" என்று கூறும் சாராரும், "இது தவறான செயல்" என்று கூறும் ஒரு சாராரும், நிச்சயமாக தங்கள் விவாதங்களை பல கருத்துக்களுடன் முன்வைப்பார்கள். ஆனால் இதைக் குறித்து உங்கள் மனம் என்ன சொல்கின்றது?

அந்த மனிதன் கையும் கணக்குமாக உழைத்து வந்த நாட்களிலே, எனதெல்லாம் என் இயேசு, இயேசுவின் ஊழியமே என் தாகம் என்று போதகருடன் இணைந்து பல ஊழியங்களை செய்து வந்தான். வீட்டின் மாதச் செலவுகள் போக, இதர காரியங்களைச் சந்திப்பதற்கு கையில் பணம் மிஞ்சுவதில்லை. எனவே, வேறு எந்த காரியங்களைக் குறித்து எண்ணமில்லாமல், எல்லா ஜெபக் கூட்டங்களிலும், ஆராதனைகளிலும், வீட்டுக் கூட்டங்களிலும் பங்குபற்றி வந்த அவனின் குடும்ப வாழ்க்கையிலே ஆவிக்குரிய நிறைவு இருந்து வந்தது. ஆனாலும் காலப் போக்கில் நிலைமைகள் மாறி, வியாபரம் விருத்தியடைந்ததால், செல்வம் பெருக ஆரம்பித்து. இந்த உலகத்திற்குரிய செல்வப் பெருக்கை, பொதுவாக தேவ ஆசீர்வாதத்தின் அளவு கோலாக பலர் இன்று பயன்படுத்துகின்றார்கள். அதை நீங்களே நிதானித்துப் பாருங்கள்.

இப்போது, கைநிறைய பணம் இருக்கின்றது. இப்போது, எல்லா ஆராதனைகளுக்கும் போகத் தேவையில்லை அல்லது எல்லா ஆராதனைக்கும் போக நேரமில்லை என்ற மனநிலை உருவாகியிருக்கின்றது. முன்பு சபையும் அங்குள்ளவர்களுமே ஆதரவாக இருந்தார்கள் ஆனால் ஒரு காலகட்டத்திலே, தாம் வாழ்ந்து வந்த சமுதாயத்திலே ஒரு பொருட்டாக எண்ணப்படாதவர்களுக்கு இப்போது சமூக அந்தஸ்து கிடைத்து

விட்டது. இப்போது, வாழ்க்கையிலே இதர நிகழ்ச்சிகளும், உல்லாச பயணங்களும் அத்தியவசியமானது என்ற நிலை உருவாகிவிட்டது. இவை களிலே என்ன தவறு? ஒருவன் பாவம் செய்யாதிருந்தால் அவன் வாழ் க்கையிலே எந்தக் தவறும் இல்லையே. ஆனால், அத்தியாவசியமான பட்டியலிலே தேவனுடைய சித்தம் செய்வது எத்தனையாவது இடத்தில் இருக்கின்றது? தேவனுடைய ஆராதனை தவிர்ந்த மற்றய நேரங்களிலே இதர நிகழ்சிகளைச் செய்யப் போகின்றீர்களா? அல்லது இதர நிகழ்ச்சிக ளின் நேரம் தவிர்ந்த மற்றய நேரங்களிலே தேவனுடைய ஆராதனை க்கு செல்லப் போகின்றீர்களா? எதை வாழ்வில் தேடப் போகின்றீர்கள்?

பிரியமானவர்களே, இது காலை மாலை ஆராதனையைக் குறித்த விட யம் அல்ல. இது ஒரு சபையிலிருந்து இன்னுமொரு சபைக்கு ஆராத னைக்கு செல்வதைக் குறித்த காரியம் அல்ல. இது நீங்கள் உலக ஐசுவரியமுள்ளவர்களாகவோ அல்லது எளிமையான வாழ்க்கை வாழ்கி ன்றவர்களோ என்பதைக் குறித்ததான விவாதம் அல்ல. இது நீங்கள் சமுதாய அந்தஸ்து உள்ளவர்களோ அல்லது சாதாரண குடிமக்களோ என்பதைக் குறித்த விடயமும் அல்ல. இது நீங்கள் இதர நிகழ்சிகளில் ஈடுபடுவதையும், எங்கள் உல்லாச விடுமுறைகளையும் குறித்த காரி யமும் அல்ல. இது எங்கள் மனநிலையிலே ஏற்படும் மாற்றங்களைக் குறித்த காரியம்! நாம் விரும்பிய பிரகாரமாக, என் வசதிக்கேற்ப தேவ னுக்குரிய காரியங்களை நாங்களே மாற்றியமைப்போம் என்ற மன நிலை எங்கள் வாழ்வில் உண்டாகும்போது நாங்கள் வழுவிப்போகின்ற இருதயமுள்ளவர்களாக பின்மாற்றமடைந்து விலகிப் போகின்றோம்.

உங்கள் பிள்ளைகளில் ஒருவன், பரீட்சைக்காக வருடம் முழுவதும் கடுமையாகப் படித்து விட்டு, பரீட்சையின் நாளிலே, எப்போதும் தவறு கின்றவனாக இருந்தால் அதை எந்தப் பெற்றோர் ஏற்றுக் கொள்வார் கள்? வருடம் முழுவதும் நன்றாகத்தானே பாடங்களை கற்றுக் கொண் டேன். மனிதர்கள் யாவரும் தவறுவிடுகின்றார்கள், ஒரு நாள் மட்டும் நான் தவறிவிட்டால் அதில் என்ன தவறு? என்று கூறக் கூடுமோ? முடி யாது, ஏனெனில் அந்த நாள் பரீட்சையின் நாள்! நீ கற்றுக் கொண் டதை பரீட்சித்துப் பார்க்கும் நாள். வருடம் முழுவதும் ஆராதனைக்குத் தவறாமல் வருகின்றேன், ஆனால் ஒரு ஞாயிறு தவறினால் என்ன? அந்த ஞாயிறுதான் உன் பரீட்சையின் நாள். நீ ஒரு ஞாயிறு ஆராத னைக்கு சமுகமளிக்காததைக் குறித்த காரியம் அல்ல, நீ ஏன் அன்று அந்த ஞாயிறு ஆராதனைக்கு சமுகமளிக்கத் தவறினாய் என்பதைக் குறித்த காரியம் இது. அந்தக் காரணம் நீ யார் என்பதையும், உன் மனநிலை என்ன என்பதையும் குறித்து உனக்கு கற்றுக் கொடுக்கும்.

வருடம் முழுவதும் என் கணவனுக்குரிய கனத்தைக் கொடுத்து வருகி ன்றேன், அவருக்கு கீழ்ப்படிகின்றேன், ஆனால், சபை சங்கம் நடுவில் அவரைக் கனப்படுத்த வேண்டிய நாளிலே கனத்தை கொடுக்காமல். "அட, ஒரு நாள் தவறினால் என்ன?" என்று கூறுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. உன் மனைவியை கசந்து கொள்ளாதே, அவளுக்கு உன் அன்பைக் காட்டு என்பதன் பிரகாரமாக நான் என் மனைவியை அன்பு செய்கின்றேன், ஆனால் நான் உண்மையாக அவளை நேசிக்கி ன்றேனா என்று காண்பிக்கும்படி ஒரு இக்கட்டான ஒரு சூழ்நிலை (பரீட்சையின் நாள்) வந்தபோது, அவளை அவன் பல உறவினர்

முன்னிலையிலே மிகவும் கசந்து கொண்டுவிட்டு, “அட, ஒரு நாள் தவறினால் என்ன?” என்று சொல்லலாகுமா? அதுபோலவே, சபை முன்னிலையிலும், எங்கள் சகோதர சகோதரிகள் முன்னிலையிலும், தேவனுக்கும், மற்றவர்களுக்கும் நாங்கள் சாட்சியாக நிற்க வேண்டிய நாளிலே, சாட்சியற்ற வாழ்க்கை வாழ்ந்துவிட்டு, “ஒரு நாள் தானே” என்று கூறும் விசுவாசிகளின் நிலை கவலைக்குரியது. ஏனெனில், தங்கள் சோதனையின் நாளிலே தங்கள் விருப்பப்படி காரியங்களை செய்யும் மனநிலையுடையவர்கள். இப்படியாக அவர்கள் விதைக்கும் சிறிய தீமையின் விதைகள், அவர்கள் வாழ்விலும், அவர்கள் பிள்ளைகளின் வாழ்விலும் பெரும் விருட்சமாக வளர்ந்து பெருகும். உடலில் பெலனும், சிந்தித்து செயலாற்றும் வயதுள்ள நாட்களில், துணிகரமாக தவறுகின்றவர்கள், உடலில் பெலவீனம் ஏற்பட்டு, தாங்களாக சிந்தித்து செயலாற்ற முடியாத நாடகளிலே என்ன செய்வார்கள்?

இரண்டு உலகங்களிலும் உச்சிதமானவைகளை பெற்றுக் கொள்வேன் (Best of both worlds) என்ற மனநிலையோடு நாங்கள் வாழ முடியாது. நாங்கள் வாழ்கின்ற இந்த உலகத்தின் பொக்கிஷங்களை நாடித் தேடலாம் அல்லது மறு உலகிற்குரிய பொக்கிஷங்களை நாடித் தேடலாம். இந்த உலகில் வாழும் எங்கள் உற்றார் உறவினர் நண்பர்களை திருப்திப்படுத்தும்படி எங்கள் சோதனையின் நாளில் நாங்கள் தவறிவிட்டு, இது ஒரு நாள் தானே என்று கூறும் மனநிலை எங்களுக்கு இருக்கக் கூடாது. இரண்டு உலகங்களையும் திருப்திப்படுத்த ஒரு மனிதனாலும் கூடாது. அது போல இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்யவும் எங்களால் கூடாது. எங்கள் பரலோக எஜமானனாகிய எங்கள் இயேசுவின் வழியில் வாழ வேண்டும் அல்லது இந்த உலக போக்கின் அதிபதியாகிய பிசாசுக்கு ஊழியம் செய்கின்றவர்களாக மாறிவிடுவோம் (மத்தேயு 6:24)

உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும், பூமியிலே வாழ்நாள் நீடித்திருப்பதற்கும், உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக என்பதே வாக்குத்தத்தமுள்ள முதலாங் கற்பனையாயிருக்கிறது. (எபேசியர் 6:2-3). எப்படி எங்கள் பெற்றோரை கனம் பண்ணுவது? அவர்களை மனதார அன்பு செய்கின்றவன், தன் கிரியைகள் வழியாக தன் கனத்தை வெளிக்காட்டுவான். கட்டுக் காசை மட்டும் கொடுத்துவிட்டு என் கடமை முடிந்து விட்டது என்று கூறுவது தாய் தந்தையருக்கு கொடுக்கும் கனம் அல்ல. ஒரு மனிதனுடைய இருதயத்திலே உள்ளது என்ன என்பதை, காலப்போக்கில் அவன் தன் வாழ்வில் காட்டும் கனிகள் வழியாக மற்றவர்கள் யாவரும் அறிந்து கொள்வார்கள். (மத்தேயு 7:16-20)

தன் மகன், சிறந்த ஆசிரியரிடம், நேர்த்தியாக வாத்தியக் கருவியை கற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காக, தான் செல்லும் ஆலயத்தையும், ஆராதனையின் நேரத்தையும் தந்தை மாற்றியமைத்தார். இதன் வழியாக அவர் தன் மகனுக்கு கற்றுக் கொடுக்கும் பாடம் என்ன? அவன் வளர்ந்து தன்னுடைய சோதனையின் நாளிலே என்ன செய்வான்? தன்னுடைய வசதிக்கமைய அப்பா ஆராதனையை மாற்றினார், ஆதலால் நான் என் வியாபாரத்தின் நேரத்திற்கமைய நானும் ஆராதனை நேரங்களை மாற்றியமைப்பேன் என்பான் அல்லவா. வாத்தியக் கருவிகளை நேர்த்தியாக வாசிப்பதினால் மட்டும் எங்கள் துதி

தேவனுக்கு உகந்த வாசனையாக இருக்கப்போவதில்லை. முதலாவது எங்கள் இருதயம், எங்கள் மனநிலை தேவனுக்கு உகந்ததாக மாற வேண்டும். மனநிலை திருக்குள்ளதாக இருந்தால் அங்கிருந்து புறப்ப டும் எல்லாமே திருக்குள்ளதாக இருக்கும். தேவன் அத்தகைய ஆராத னைகளில் பிரியப்படுகின்றவர் அல்லர்.

இந்தக் கட்டுரையிலே கூறப்பட்ட தந்தையாரின் நிலைமை ஒரு உதார ணமாக கூறப்பட்டிருக்கின்றது. இவ்வண்ணமாக மனிதர்கள் இன்று தங் கள் இஷ்டப்படி தேவனுக்கு கொடுக்க வேண்டிய நேரங்களை தங்கள் வசதிக்கேற்ப பல அற்பமான உலக காரியங்களுக்காக மாற்றிக் கொள் கின்றார்கள். விசுவாச ஜெபத்தினால் இந்த உலகத்திலே நாங்கள் தேவனை ஆராதிக்க வரும் தடைகளை மேற்கொள்வதற்கு பதிலாக, அந்த தடை களுக்கு இடங் கொடுப்பதற்கு வசதியாக எங்கே தேவ காரியங்கள் அமை ந்திருக்கின்றது என நாடித் தேடுகின்றார்கள்.

நீஙகள் சந்திக்கும் தனிப்பட்டதும் பிரத்தியேகமானதும், யாருக்கும் விள க்கிக் கூறமுடியாததுமான சூழ்நிலைகள் உங்கள் வாழ்க்கையில் இரு க்கலாம். உங்கள் வாழ்க்கையில் உள்ள சிரமங்களையும், நீங்கள் எதி ர்நோக்கும் சவால்களையும், உங்கள் மனநிலையையும் தேவன் அறி வார். சிலர், திக்கற்ற நிலையில் வாழ்கின்றார்கள். வயோதிபத்தினாலும், நோய்களினாலும், வீடுகளிலும், மருத்துவசாலைகளிலும், பராமரிப்பு நிலை யங்களிலும் இருக்கின்றார்கள். சிலர் சிறையிலே இருக்கின்றார்கள். இவ ர்கள் யாவரின் சூழ்நிலைகளையும், மனநிலைகளையும் தேவன் அறிந்த வராக இருக்கின்றார்.

இந்தக் கட்டுரையின் கருப்பொருளாவது, உங்கள் அத்தியாவசிய பட்டி யலில், முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் நீதியையும் தேடுவது எப்போதும் முதலிடத்திலிருக்கட்டும். நாங்கள் வாழும் இந்த உலகில் எங்களுக்கு நஷ்டம் ஏற்பட்டால், அவை மிஞ்சி மிஞ்சிப் போனால் 90 அல்லது 100 வருடங்கள். ஆனால், எங்கள் ஆத்துமாவுக்கு நஷ்டம் ஏற் பட்டால், அந்நிலைமை, மறு உலகிலே நித்திய நித்தியமான நஷ்ட த்தை உண்டு பண்ணும். கிறிஸ்துவுக்காய் தங்கள் உயிரையே தியா கம் செய்தவர்கள் எங்கள் முன் சாட்சியாக வைக்கப்பட்டிருக்கி ன்றார் கள். ஆனால் சிலர் கிறிஸ்துவுக்காக இந்த உலகில் அற்பமாக தோன் றுபவைகளைக் கூட இழக்கத் தயார் நிலையில் இல்லை. தங்கள் வச தியின்படி வாழ தங்களை அர்ப்பணிக்கின்றார்கள்.

ஆகிலும், எனக்கு லாபமாயிருந்தவைகளெவைகளோ அவைகளைக் கிறி ஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினேன். அதுமாத்திரமல்ல, என் கர்த்த ராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவ ற்றையும் நஷ்டமென்று எண்ணிக்கொண்டிருக்கிறேன் என்று தேவ ஊழி யராகிய பவுல் வாழ்ந்த பிரகாரமாக நாங்கள் எங்கள் மனநிலையை மாற்றிக் கொண்டு முன்னேறுவோம்.

**இருதயத்தை ஆராய்ந்தறிகின்ற தேவன், உங்களை வழிநடத்திச் செல்வாராக! ஆமேன்!**

# “அழைக்கப்பட்டவர்கள்”

**பிரசங்கக் குறிப்புக்கள்** - போதகர் ரஞ்சிற் கொன்ஸ்ரன்ரைன்

**[IF YOU WOULD LIKE TO LISTEN TO THE FULL VERSION OF THIS MESSAGE IN ENGLISH OR TAMIL, FOLLOW THE LINK THAT IS PROVIDED AT THE END THIS SERMON NOTES]**

## பிரதான வசனம் : 1 கொரிந்தியர் 1:22-24

யூதர்கள் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாக இருந்தார்கள். அவர்கள் மீட்பராகிய இயேசுவையும் அவராலே செய்யப்பட்ட அதிசய ங்களைக் கண்டிருந்தும், அவர்களில் பலர் அவர்மேல் விசுவாசம் வைக் காமல் அடையாளங்களையே தேடினார்கள். கிரேக்கர்கள் தேவனை அறியாதவர்களும் தேவ உடன்படிக்கைக்கு அப்பாற்பட்டவர்களுமாயிருந் தார்கள். அவர்கள் தேவன்மேல் விசுவாசம் வைப்பதற்குப் பதிலாக உல கத்தினாலுண்டான தங்கள் ஞானத்தினால் யாவையையும் உறுதிப்படு த்த விரும்பினார்கள். தத்துவங்களின்படி தங்கள் வாழ்க்கையை வாழ் பவர்களாயிருந்தார்கள். உலகத்தினால் உண்டாகும் மகிமையை அவர் கள் தேடினார்கள். ஆகிலும் யூதரானாலும் கிரேக்கரானாலும் அவர்க ளில், எவர்கள் தேவனில் விசுவாசம் வைத்தார்களோ, அவர்களுக்குக் கிறிஸ்து தேவபெலனும் தேவஞானமுமாயிருக்கிறார்.

ஒரு சமயம் இயேசுவும் அவருடைய சீஷர்களும் கடலுக்கு அக்கரை யிலுள்ள கதரேனருடைய நாட்டில் வந்தார்கள். அங்கே, அசுத்த ஆவி யுள்ள ஒரு மனுஷன் பிரேதக்கல்லறைகளிலிருந்து அவருக்கு எதிராக வந்தான். அவனுடைய குடியிருப்பு கல்லறைகளிலே இருந்தது. அவ னைச் சங்கிலிகளினாலும் கட்ட ஒருவனாலும் கூடாதிருந்தது. அவன் அநேகந்தரம் விலங்குகளினாலும் சங்கிலிகளினாலும் கட்டப்பட்டிருந்தும், சங்கிலிகளை முறித்து, விலங்குகளைத் தகர்த்துப்போடுவான் அவனை யடக்க ஒருவனாலும் கூடாதிருந்தது. அவன் எப்பொழுதும் இரவும் பக லும், மலைகளிலும் கல்லறைகளிலும் இருந்து, கூக்குரலிட்டு, கல்லு க ளினாலே தன்னைக் காயப்படுத்திக்கொண்டிருந்தான். இந்த உலக தத் துவங்களினாலோ, ஞானத்தினாலோ, உலகத்திலுள்ள வேறெந்த வழிகளி னாலோ அவனை விடுதலை பண்ண முடியவில்லை. ஆனால், இயேசு அவனை ஒரு கணப்பொழுதிலே விடுதலையாக்கினார்.

பன்னிரண்டு வருஷமாய் தனக்கேற்பட்டிருந்த வியாதினால் அவஸ்தை ப்பட்டுக் கொண்டிருந்த பெரும்பாடுள்ள ஒரு ஸ்திரி இருந்தாள். தன் ஆஸ்திகளையெல்லாம் வைத்தியர்களுக்குச் செலவழித்தும், அவளை ஒருவராலும் குணப்படுத்த முடியாதிருந்தது. அவள் இயேசுவை விசுவா சித்தாள். அவருக்குப் பின்னாக வந்து, அவருடைய வஸ்திரத்தின் ஓரத் தைத் தொட்டாள் உடனே அவளுடைய பெரும்பாடு உடனே நின்றுபோ யிற்று. இயேசுவினால் அழைக்கப்பட்டு அவரை விசுவாசிக்கின்றவர்களு க்கு கிறிஸ்து தேவபெலனாயிருக்கின்றார்.

ஒரு குஷ்டரோகியாகிய மனுஷன் இயேசுவைத் தேடி வந்தான்.இவர்கள் அசுத்தமானவர்கள் என்றும் அக்காலத்திலே குஷ்டரோகம் கொடிய வியாதியாய் இருந்தபடியால், அவர்களைத் தொட்டால் மற்றவர்களும் அந்த வியாதியினால் பிடிக்கப்படுவார்கள் என்று சமுதாயத்தினால் தள்ளப்பட்டிருந்தார்கள். எந்த மனிதர்களுடைய தத்துவங்களாலும் அவர்களைக் குணப்படுத்த முடியவில்லை. ஆனால், இயேசுவோ மனதுருகி, அவர்களைத் தொட்டு குணமாக்கினார்.

இன்றும் அநேகர், தேவன்மேல் விசுவாசம் வைப்பதற்கு பதிலாக, அடையாளத்தையும், ஞானத்தையும் தேடி இன்றும் ஓடிக்கொண்டே இருக்கின்றார்கள். இயேசு கிறிஸ்துவே எமக்கு தேவ பெலனும் தேவ ஞானமுமாயிருக்கின்றார்.

கிறிஸ்துவை அறியாத நாட்களிலே நாங்களும் இருளின் அதிகாரத்திற்கு உட்பட்டிருந்தோம். எங்களில் தேவனுடைய பெலன் வெளிப்பட்ட போதோ, நாங்கள் ஒரு கணப்பொழுதிலே அவர் இரட்சிப்பை பெற்றுக் கொண்டோம்.

இயேசுவின் சீஷர்களாகிய பேதுருவும் யோவானும், இந்த உலகத்தின் முறைப்படி கல்வியறிவற்றவர்கள். ஒரு முறை அவர்கள் யூதரின் ஆலோசனைச் சங்கத்திற்கு முன்பாக கொண்டுவரப்பட்டார்கள். அந்த சங்கத்திலே இருக்கும் மனிதர்கள், இந்த உலக முறைப்படி நன்றாகக் கற்றவர்கள். வேத பிரமாணங்களை நன்றாக அறிந்தவர்கள் என்று இந்த உலகத்தினால் சாட்சி பெற்றவர்கள். ஆனால், இயேசுவின் சீஷர்கள் பேசும் போது, பேசுகின்ற தைரியத்தை அவர்கள் கண்டு, அவர்கள் படிப்பறியாதவர்களென்றும் பேதமையுள்ளவர்களென்றும் அறிந்தபடியினால், இந்த அறிவு இவர்களுக்கு எப்படி வந்தது என்று ஆச்சரியப்பட்டார்கள். அவர்கள் இயேசுவுடனேகூட இருந்தவர்களென்றும் அறிந்து கொண்டார்கள். பிரியமானவர்களே, இயேசு கிறிஸ்துவினால் அழைக்கப்பட்டு, அவரை விசுவாசிக்கின்றவர்களுக்கு அவரே தேவஞானமுமாயிருக்கிறார்.

இந்த உலகத்தின் முறைமைகளின்படி ஒருவன் எப்படிப்பட்ட ஞானமுள்ளவனாகவும் இருக்கலாம். அவன் பெரிய ஐசுவரியவானாக இருக்கலாம். அவன் இந்த உலகத்திலே பிரபல்யமானவனாகவும் இருக்கலாம். ஆனால் அவன் ஆத்துமாவை அவனாலோ, அவனுடைய உலக ஞானத்தினாலோ, அவனுக்குண்டான ஆஸ்திகளினாலோ ஒருபோதும் மீட்டுக் கொள்ள முடியாது.

ஆனால், கிறிஸ்துவழியாக மாத்திரமே எங்களுடைய ஆத்துமாவிற்கு இரட்சிப்பு உண்டாகின்றது. இந்த தேவபெலத்திற்கு நிகரான காரியம் ஒன்றுமில்லை. அவரே எங்களை அழைத்தவர். அவரே எங்களுக்கு தேவ பெலனும் தேவ ஞானமுமாயிருக்கின்றார்.

**[**இந்த தேவ செய்தியின் முழுமையான ஒலிப்பதிவை பின்வரும் இணையத் தளத்தில் (**INTERNET WEBSITE** இல்) தமிழ் ஆங்கில மொழிகளில் கேட்கலாம்.]



gtachurch.ca

# சேனைகளின் கர்த்தர் எங்களோடு

இஸ்ரவேல் ஜனங்கள் சுமார் 400 ஆண்டுகள் எகிப்திலே அடிமைகளாயிருந்தார்கள். அவர்கள் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டு, வாக்களிக்கப்பட்ட செழிப்பு நிறைந்த கானான் தேசத்திற்கு மோசே என்னும் மனிதனினூடாக வனாந்திரத்தின் வழியாக நடத்திச் செல் லப்பட்டார்கள். வனாந்திரத்திலே கடும் வெப்பம், கடும் குளிர், தண்ணீரில்லாத வறட்சி, வனவிலங்குகள், ஊரும் பிராணிகளால் வரும் பயங்கரங்கள், எதிரிகளால் உண்டாகும் பயங்கரங்கள் மத்தியிலே, காடும் மலையுமான பாதை வழியாக கொண்டு செல்லப்பட்டார்கள். பல இலட்சக்கணக்கான ஜனங்கள். பல தலைமுறைகளாக யுத்தம் செய்த அனுபவம் இல்லாதவர்கள். படைத் தலைவன் என்ற நிலைக்கு யாருமில்லை. தளபதிகள் என்று கூறுவதற்கு யாருமில்லை. யுத்த வீரர்கள் என்று அனுபவமிக்கவர்கள் எவருமில்லை. ஆனால் சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் அவர்களோடிருந்தார். கர்த்தர் அவர்களின் சேனைத் தலைவராக நின்றார். உங்கள் எதிரிகளுக்கு பயப்படீர்களாக. தேவனாகிய கர்த்தர் நான் உங்களுக்காக யுத்தம்பண்ணுவேன் என்றார். ஆம் பிரியமானவர்களே, இயேசுவை அறிய முன்பு, நாங்கள் பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்தோம். நாங்கள் பாவத்திலே அழிந்து மாய்ந்து போகாதபடிக்கு, பாவத்திலிருந்து எங்களை பரிகரிக்க, அவர் தாமே இந்த பூவுலகத்திற்கு வந்தார். எங்களை பாவ கட்டுகளிலிருந்து மீட்டு இரட்சித்தார். பாவ இருளும் பயங்கரங்களும் நிறைந்த உலகத்தில் எங்களை எதிர்க்கும் சக்திகள் பல உண்டு. அதன் வழியாக எங்களை பரம கானானாகிய பரலோகத்திற்கு வழி நடத்திச் செல்கின்றார். இந்த உலகிலே வாழும் வரைக்கும் எங்களுக்கு போராட்டங்கள் உண்டு. ஆனால் பயம் ஏதுமில்லை ஏனெனில் எங்கள் கர்த்தராகிய இயேசு தாமே எங்கள் சேனையின் தலைவராக முன் செல்கின்றார். எங்கள் சொந்த பெலத்தால் நாங்கள் இந்த உலகத்தை ஜெயிக்க முடியாது. ஆனால், மரணத்தை வென்று, உலகத்தை ஜெயித்த இயேசு எங்களோடு கூட இருக்கின்றார். சவால்களையும் பயங்கரங்களையும் கண்டு மருண்டு போய்விடாதிருங்கள் சேனையின் கர்த்தர் எங்களோடிருக்கின்றார்.

**யாத்திராகமம் 14:14**

**கர்த்தர் உங்களுக்காக யுத்தம் பண்ணுவார் நீங்கள் சும்மாயிருப்பீர்கள் என்றான்.**

**ஜெபம்**: சர்வ வல்லமையுள்ள சேனைகளின் தேவனே, பாவ இருள் சூழ்ந்து இருக்கும் இந்த உலகத்திலே என்னை எதிர்க்கும் சக்திகளை மேற்கொள்ளும்படி துணை நின்று என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கர்த்தர் என்பது அவர் நாமம்

தங்கள் ராஜ்யங்களின் படைப்பலத்தைக் குறித்து பெருமை பாராட்டும் போது, சிலர் இரதங்களைக்குறித்தும், சிலர் குதிரைகளைக் குறித்தும் மேன்மைபாராட்டுகிறார்கள். அவ்வண்ணமாகவே இன்றைய நாட்களிலும், தங்களிடத்திலிருக்கும் போர் வீரர்களின் எண்ணிக்கைகளையும், நவீனமான கனரக ஆயுதங்களையும் குறித்து மேன்மை பாராட்டுவார்கள். நாங்கள் கர்த்தரின் சேனையின் (படை) போர்ச் சேவகர்களாக இருக்கின்றோம். எங்கள் ஆயுதங்களையும், படைப்பலத்தையும் குறித்து நாங்கள் மேன்மை பாராட்டுவதில்லை. கர்த்தராகிய இயேசுவின் நாமத்தைக் குறித்தே நாங்கள் மேன்மை பாராட்டுகின்றோம். மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின் கீழ் தண்ணீரிலும், மனிதர்கள் இரட்சிப்படைவதற்கு அருளப்பட்ட மேன்மையான நாமம், இயேசுவின் நாமம். அவரே சேனைகளின் அதிபதியாகிய கர்த்தர்! அவரே எங்கள் அதிபதி! நாங்கள் அவருடைய யுத்த வீரர்களாக இருக்கின்றோம். எங்கள் மேல் பறக்கும் அவரு டைய கொடி அன்பு! பிசாசானவனே எங்கள் எதிரி. இந்த பூமியிலே வாழும் வரை எங்களுக்கு போராட்டங்கள் உண்டு. இப்பிரபஞ்சத்தின் அந்த காரலோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு. அந்த போராட்டங்களிலிருந்து வெற்றி பெறும்படி நாங்கள் ஆயுதங்களைத் தரித்திருக்கின்றோம். அந்த ஆயுதங்கள் இந்த பூமிக்குரியவைகள் அல்ல. அவை எங்களுடைய உடற் பெலன் அல்ல. எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்கு தேவபலமுள்ளவைகளாயிருக்கிறது. நாங்கள் உலகத்தை அழிக்கின்றவர்கள் அல்லர். மனிதர்களை சிறைப்பிடிக்கின்றவர்கள் அல்லர். தேவ பெலத்தினாலே நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம். கர்த்தர் என்பது அவருடைய நாமம்! எப்படிப்பட்ட போராட்டங்கள் எங்களை நோக்கி வந்தாலும் அவருடைய நாமத்திலே ஜெயங்கொள்கின்றவர்களாக இருக்கின்றோம்.

**யோவான் 16:33**

**உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள் நான் உலகத்தை ஜெயித்தேன் என்றார்.**

**ஜெபம்**: பராக்கிரமமுள்ள தேவனே, இந்த உலகத்திலே எங்களுக்கு போராட்டங்கள் இருந்தாலும், இயேசுவின் நாமத்திலே அவைகளை ஜெயிக்க வேண்டும் என்னும் எண்ணத்தை என்னில் புதுப்பித்தருளும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பெலவீனத்தில் என் துணை

ஒரு காலகட்டத்திலே தேவனுடைய ஜனங்களாகிய இஸ்ரவேலர், தங்கள் தேவனை மறந்து அவரைவிட்டுத் தூரம் சென்றதால், எதிரிகளால் மிகவும் சிறுமைப் படுத்தப்பட்டார்கள். மீதியானியரின் கை இஸ்ரவேலின்மேல் பலத்துக்கொண்டபடியால், இஸ்ரவேல் புத்திரர் மீதியானியர் நிமித்தம் தங்களுக்கு மலைகளிலுள்ள கெபிகளையும் குகைகளையும் அரணான ஸ்தலங்களாக அடைக்கலங்களாக்கிக் கொண்டார்கள். மீதியானியரோ தங்கள் மிருகஜீவன்களோடும், தங்கள் கூடாரங்களோடும், வெட்டுக்கிளிகளைப்போல் திரளாய் வருவார்கள் அவர்களும் அவர்கள் ஒட்டகங்களும் எண்ணிமுடியாததாயிருக்கும் இந் தப்பிரகாரமாக இஸ்ரவேல் தேசத்தைக் பாழாக்கிக் கொண்டிருந்தார்கள். இஸ்ரவேல் தங்கள் தேவனாகிய கர்த்தரை விட்டுத் தூரம் சென்றதை உணர்ந்து மனந்திரும்பி, தங்கள் தேவனை நோக்கிப் பார்த்தார்கள். இஸ்ரவேல் கோத்திரங்களுக்குள்ளே கிதியோன் என்னும் சிறுமையும் எளிமையுமான மனிதன் இருந்தான். கர்த்தருடைய தூதனானவர் அவனை நோக்கி: உனக்கு இருக்கிற இந்தப் பலத்தோடே போ. நீ இஸ்ரவேலை மீதியானியரின் கைக்கு நீங்கலாக்கி ரட்சிப்பாய் உன்னை அனுப்புகிறவர் நான் அல்லவா என்றார். நான் உன்னோடேகூட இருப்பேன் ஒரே மனுஷனை முறிய அடிப்பதுபோல நீ மீதியானியரை முறிய அடிப்பாய் என்றார். பின்பு கர்த்தர், கிதியோனோடே கூட இருந்தார். அவனும் கர்த்தர் சொன்னபடியே யுத்தத்திற்கு ஆயத்தப்படுத்தினான். 300 போர்வீரர்களோடு மீதியானியரின் ஒரு பலத்த இராணுவத்தை இலகுவாக மேற்கொண்டான். பிரியமானவர்களே, எங்கள் போராட்டத்தின் பெலன் எங்கள் கர்த்தர். எங்கள் வாழ்வில் நாங்கள் சமாதானத்தை இழந்து, அங்கலாய்த்துக் கொண்டிருந்தால், நாங்கள் கர்த்தரைவிட்டு தூரம் சென்றுவிட்டோம் என்பதே பொருள். கர்த்தரிடத்திற்கு திரும்புங்கள்! உனக்கு இருக்கும் இந்த பெலன் போதும் நான் உன்னுடனே கூட இருக்கின்றேன் என்று கூறியிருக்கின்றார். நாங்கள் அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியும் போது எங்கள் பெலவீனங்களை நாங்கள் எளிதில் மேற்கொண்டு விடுவோம்.

**நியா 6:14**

**உனக்கு இருக்கிற இந்தப் பலத்தோடே போ நீ இஸ்ரவேலை மீதியானியரின் கைக்கு நீங்கலாக்கி ரட்சிப்பாய் உன்னை அனுப்புகிறவர் நான் அல்லவா என்றார்.**

**ஜெபம்**: என் பெலனான தேவனே, என் பெலவீனத்தில் நான் மாண்டு போகாமல், உம்மிலே பெலன் கொள்ளும்படி உம்முடைய வார்த்தைகளின்படி வாழ, பிரகாசமுள்ள மனக்கண்களை தந்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# இருதயத்தை காத்துக் கொள்வோம்

ஒருகிராமத்திலே வாழ்ந்து வந்த மனிதனானவன், இயற்கை மூலிகைக ளைக் குறித்து மெய்ச்சப்படத்தக்க அறிவையுடையவனாக இருந்தான். ஆனால், அவனிருந்த பண்ணையிலே எவ்விதமான மூலிகைச் செடிக ளையும் அவன் வளர்த்ததுமில்லை, அவைகளை தேவை என்று சேர் த்து வைத்ததுமில்லை. கோடை காலம் முடிந்து, உறைபனி கொட்டும் கடும் குளிர்நாட்கள் ஒன்றிலே அவனுடைய சின்ன மகள் சுகவீன முற்றதால். காலையிலே பரிகாரியிடம் சென்று மூலிகைகள் பெற்றுக் கொள் ளும்வரைக்கும், அந்த இரவில் தன் மக ளுக்கு கொடுப்பதற்கு கைவசம் எந்த மூலிகைகளையும் அவன் சேர்த்து வைக் கவில்லை. இக்கட்டான நேரத்திலே தன் மதியீனத்தை அவன் உணர்ந்து கொண் டான். இதற்கொத்ததாகவே, இன்று வேத வார்த்தைகளைக் குறித்த அறிவு மனிதர்கள் மத்தியிலே பெருகியிருக்கி ன்றது. சொந்த முயற்சிகளாலும், சபைப் போதனைகள் வாயிலாகவும், புத்தகங்களை வாசிப்பதாலும், இன்றநெற் ஊடகங்கள் வழியாகவும் மற்றும் சிலர் வேதாகமக் கல்லூரிகள் வாயிலாகவும் அதிகதிகமாக கற்றுக் கொள்கின்றார்கள். நாங்கள் இரக்கத்தை குறித்து கற்று அறி ந்து கொள்வது நல்லது. ஆனால் எங்கள் வாழ்க்கையில் மற்றவர்களு க்கு இரக்கத்தை காண்பிக்காவிட்டால், நாம் பெற்ற அந்த அறிவில் எந்தப் பிரயோஜனமும் இல்லை. இவ்வண்ணமாக, இயேசு இந்த உலகத்திலே வாழ்ந்த நாட்களிலே வேதத்தை முறைப்படி கற்ற வேத வல்லுனர்கள் பலர் வேதத்தின் கருப்பொருளை மறந்து போய்விட்டா ர்கள். ஆதலால் இயேசு அவர்களை நோக்கி: மனுஷர் பிரவேசியா தபடி பரலோகராஜ்யத்தைப் பூட்டிப்போடுகிறீர்கள் நீங்கள் அதில் பிர வேசிக்கிறதுமில்லை பிரவேசிக்கப் போகிறவர்களைப் பிரவேசிக்கவிடு கிறதுமில்லை என்றார். இவர்களை போன்றவர்கள் தேவனுடைய வார் த்தைகளை அறிந்திருந்தும் அவைகள் பெலவீன நேரங்களிலும், ஆப த்து நாட்களிலும் தங்களுக்கு உதவும்படி தங்கள் இருதயத்திலே பதி த்து வைப்பதில்லை. ஒருவனுடைய இருதயம் எதினால் நிறைந்திருக்கி ன்றதோ, அதுவே அவனிடத்திலிருந்து புறப்படும். எனவே, ஆபத்து நாட் களிலே எதிரியை மேற்கொள்ளும்படிக்கு தேவனுடைய வார்த்தைகளை எங்கள் இருதயத்தின் பொக்கிஷமாக காத்துக் கொள்ள வேண்டும்.

**சங்கீதம் 119:11**

**நான் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யாதபடிக்கு, உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன்.**

**ஜெபம்**: அன்பின் பரலோக தந்தையே, ஆபத்து நாட்களை மேற்கொள் ளும்படிக்கு, எல்லாக் காவலோடும் என் இருதயத்தை உம்முடைய வார் த்தையின்படி காத்துக் கொள்ள என்னை வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# வார்த்தையில் நிலைத்திருங்கள்

வானமும் பூமியும் ஒழிந்து போனாலும் தேவனுடைய வார்த்தை ஒழிந்து போவதில்லை. தேவனுடைய வார்த்தை வல்லமையுள்ளது. அவர் விளம்பிய வார்த்தைகள் நிறைவேறும். அந்த வார்த்தைகளிலே நாங்கள் நிலைத்திருந்தால் தேவன் விரும்பும் தெய்வீக கனிகள் எங்கள் வாழ்க்கையிலே பெருகும். ஏன் தேவனுடைய வார்த்தை மனிதர்களுடைய இருதயத்திலே நிலைத்திருக்க முடியாமல் இருக்கின்றது? விதையாகிய தேவனுடைய வார்த்தை நிலமாகிய மனிதர்களுடைய இருதயத்திலே விதைக்கப்படுகின்றது. சிலர் தங்கள் இருதயத்தை வழியோரம் போல வைத்திருக்கின்றார்கள். யாரும் சென்று வருவதற்கு அங்கே இடமுண்டு. எந்த காரியமும் அங்கே செல்வதற்கு இடமுண்டு. யாரும் வரலாம், நிலமாகிய தங்கள் இருதயத்தை பண்படுத்தி, பாதுகாக்க விருப்பம் இல்லை. நாங்கள் தேவனுடைய ஆலயமாக இருக்கின்றோம் என்பதை மறந்து, தேவ நீதிக்கு விரோதமான காரியங்களில் தங்களை சம்பந்தப்படுத்திக் கொள்கின்றார்கள். தேவ ஒளிக்கு விரோதமான காரியங்களில் தங்களை ஐக்கியப்படுத்திக் கொள்கின்றார்கள். நான் விரும்பிய இடங்களுக்கு சென்று வருவேன். என் எண்ணப்படி எதையும் செய்வேன். என் கண்கள் விரும்பியதைப் பார்ப்பேன், நான் நினைப்பதை பேசுவேன். எதையும் குடிப்பேன். இப்படியாக தங்களைப் பரந்த கொள்கையுடைய கிறிஸ்தவர்கள், என்ற பிரகாரமாக வாழ்வதினால் தேவ ராஜ்யத்தின் வசனத்தைக் எத்தனை முறை கேட்டாலும் உணர்வற்ற இருதயம் உடையவர்களாக இருப்பதினால், பொல்லாங்கனாகிய பிசாசானவன் வந்து, எமது இருதயத்தில் விதைக்கப்பட்டதைப் பறித்துக்கொள்ளுகிறான் பறித்துக் கொள்வது மட்டுமல்ல, தன்னுடைய தீவினைகளை இருதய த்திலே விதைத்து விடுகிறான். அவை வளர்ந்து பெரும் தீமையின் விருட்சமாக மாறிவிடும். அவனே வழியருகே விதைக்கப்பட்டவன். பிரியமானவர்களே, ஏதாவது ஒரு காரியத்திலே தேவனுடைய வார்த்தையைக் கேளாமல் என் விருப்பப்படி நான் வாழ்ந்து வருகின்றேனா என்று சற்று ஆராய்ந்து பார்த்து, தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து நடக்க எங்களை ஒப்புக் கொடுப்போம்.

**யோவான் 15:7**

**நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்.**

**ஜெபம்**: சர்வ வல்லமையுள்ள தேவனே, எந்த காரியத்தைக் குறித்தும் உணர்வற்ற வாழ்க்கை வாழாதபடிக்கு, உம்முடைய வார்த்தையின் வெளிச்சத்தில் வாழும்படி என்னை உணர்வுள்ளவனா(ளா)க்கும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# புதிய இருதயத்தைத் தருவார்

வனாந்தர வழியாக சென்று கொண்டிருந்த தேவனுடைய ஜனங்களாகிய இஸ்ரவேலருக்கு தேவனாகிய கர்த்தரே சேனைகளின் அதிபதியாக இருந்தார். மோசே என்னும் மனிதன் தேவனுடைய வார்த்தையை ஜனங்களுக்கு அறிவித்து வந்தான். அந்நிய தேசத்து எதிரிகளால் வந்த மோசங்களிலிருந்து கர்த்தர் அவர்களைப் பாதுகாத்தார். கர்த்தர் யுத்தங்களை நடப்பித்தார். ஆனால் தங்கள் சொந்த வாழ்க்கையில் வந்த யுத்தங்களில் (போராட்டங்களில்) அவர்களால் வெற்றி கொள்ள முடியவில்லை. அதன் காரணம் என்ன? ஏனெனில் அவர்கள் மனதிலே நிலையற்றவர்களும் வழுவிப்போகின்ற இருதயம் உடையவர்களாகவும் இருந்தார்கள். கர்த்தருடைய வசனத்தை கேட்கும் போது சந்தோஷம் அடைவார்கள்.கர்த்தருடைய அதிசய கிரியைகளைக் காணும் போது ஆடிப் பாடி ஸ்தோத்தரிப்பார்கள். ஆனால், நெருக்கங்கள் வாழ்க்கையில் சூழும் போது, தேவனுடைய வார்த்தையையும், வாக்குத்தத்தங்களையும், அவர் செய்த அதிசயமான செயல்களையும் மறந்து போய்விடுவார்கள். செங்கடல் அருகே வந்த போது, பார்வோனின் சேனை அவர்களை பின் தொடர்ந்து வந்தது. அவ்வேளையிலே மிகவும் கலக்கம் அடைந்தார்கள்.ஆனால் கர்த்தரோ செங்கடலை பிளந்து, அதிலே பாதையை அமைத்தார். அதன் வழியாக கடந்து சென்று அக்கரை அடைந்தபின், ஆடிப்பாடினார்கள், ஆனால் மூன்று நாட்கள் கடந்த பின், குடிப்ப தற்கு தண்ணீர் இல்லை என்று கலகம் பண்ணினார்கள். தேவனோ அதிசயிக்கத்தக்க விதமாக தண்ணீரைக் கொடுத்தார். அப்போது திருப்த்தியானார்கள். இப்படியாக தங்கள் இருதயங்களை எப்போதும் கடினப்படுத்திக் கொண்டிருந்தார்கள். இதுவே, மண்ணில்லாத கற்பாறை நிலமாகிய இருதயம். அங்கே தேவனுடைய வார்த்தை ஆழமாக வேர் விடுவதற்கு இடமில்லை. பிரியமானவர்களே, நன்மைக்காகவே, தேவ வார்த்தையின் வெளிச்சத்தில் எங்கள் வாழ்க்கையை ஆராய்ந்து பார்க்க வேண்டும். இருதய கடினம் இருக்கும் இடத்தில் முறுமுறுப்புக்களும் கலகங்களும் இருக்கும். இன்று தேவனுடைய சத்தத்திற்கு செவி சாய்ப்போமாக. அப்போது எங்கள் உள்ளத்திலே தேவனானவர் புதிதான ஆவியைக் கட்டளையிட்டு நவமான இருதயத்தைக் கொடுப்பார்.

**எசேக்கியேல் 36:26**

**கல்லான இருதயத்தை உங்கள் மாம்சத்திலிருந்து எடுத்துப்போட்டு சதையான இருதயத்தை உங்களுக்குக் கொடுப்பேன்.**

**ஜெபம்:** இரக்கமுள்ள தேவனே, நிலையற்ற வழுவிப்போகும் கல்லான இருதயத்தை நானே எனக்குள் உண்டு பண்ணாமலிருக்க, உம்முடைய தூய ஆவியினாலே என் இருதயத்தை எப்போதும் புதிப்பித்து நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# விசுவாசத்தின் நல்ல போராட்டம்

ஒருவேளை எங்கள் குடும்பத்திற்கு அன்றன்றையத் தேவைகளை சந்திப்பதற்குரிய அளவிற்கே பணம் இருக்கலாம். பெரிதான மாளிகை இல்லை. விதம்விதமாக உடுத்துவதற்கு ஆடைகள் இல்லை. இந்த நிலையிலே நாங்கள் ஒவ்வொருவரும் எங்களைக் கேட்க வேண்டிய கேள்வியானது "கர்த்தருக்குள் நான் மனரம்மியமாக இருக்கின்றேனா? எங்களுடைய குடும்பத்திலே கர்த்தருடைய சமாதானம் இருக்கின்றதா?" அப்படி இல்லாதிருக்குமென்றால், இதை இன்றே அடையும்படி நாடித் தேட வேண்டும். ஏனெனில் இயேசு எங்களுக்கு விட்டுச் சென்ற சமாதானம் இந்த உலகத்தாலும் அதன் பொருட்களாலும் உண்டான சமாதானம் அல்ல. அப்படி நாங்கள் இப்போது இரு க்கும் நிலைமையில் சமாதானத்தை அடையாவிடின், வாழ்க்கையில் எவ்வளவு ஐசுவரியம் வந்தாலும் தேவ சமாதானத்தை அடையமுடியாது. உலக செல்வத்தினால் நிம்மதி கிடைக்கும் என்ற எண்ணமுடையவர்களுக்கு அவர்களின் விசுவாசம் தேவனிடத்தில் இருக்காது. நான் உயர்ந்திருந்தாலும், நான் தாழ்ந்திருந்தாலும், எந்த நிலையிலிருந்தாலும் இப்போதும், எப்போதும் இயேசுவுக்குள் மகிழ்ச்சியாக இருப்பேன் என்ற மனநிலை எங்களில் இருக்கும் போது, ஒருவேளை இந்த உலக ஐசுவரியம் எங்களுக்கு உண்டானாலும், உலகக்கவலையும் ஐசுவரியத்தின் மயக்கமும் தேவனுடைய வசனத்தை நெருக்கிப் போடுவதில்லை. பண ஆசையினாலே தேவபிள்ளைகளாகும்படி அழைக்கப்பட்டவர்கள் தங்கள் விசுவாசம் என்னும் கேடகத்தைவிட்டு வழுவி ப்போவதால், உலகத்திலுள்ள போராட்டங்களில் தோல்வியுற்று, அநேக வேதனைகளினாலே தங்களை உருவக் குத்திக்கொண்டிருக்கிறார்கள். "போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம். உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்கக்கடவோம். எனவே உலக ஐசுவரியத்தை நாடித் தேடாமல், விசுவாசத்திலே நல்ல போராட்டத்தை போராடு நித்தியஜீவனைப் பற்றிக்கொள் அதற்காகவே நாங்கள் அழைக்கப்பட்டிருக்கின்றோம்" என்று தேவ ஊழியராகிய பவுல் கூறிய அறிவுரைவுரையின்படி வாழ்வோம்.

**1 தீமோத்தேயு 6:11**

நீயோ,தேவனுடையமனுஷனே இவைகளை விட்டோடி, நீதியையும் தேவபக்தியையும் விசுவாசத்தையும் அன்பையும் பொறுமையையும் சாந்தகுணத்தையும் அடையும்படி நாடு.

**ஜெபம்:** என்னை அழைத்த தேவனே, இந்த உலக ஐசுவரியத்தின் மயக்கத்தால், என் இருதயத்தில் உம்முடைய வார்த்தையை நெருக்கிப் போடாமல், விசுவாசத்தில் நிலைத்திருக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பண்பட்ட நல்ல நிலம்

எங்கள் இருதயமானது ஒரு வேளை வழியோரம் போன்ற நிலமாக இருக்கலாம், அல்லது கற்பாறையை போல கடினப்பட்டிருக்கலாம் அல்லது உலக ஆசைகளாகிய முற்செடிகள் நிறைந்ததாக இருக்கலாம். தனது இருதயம் எப்படியாக பலனற்றுப் போய் இருந்தாலும், பலனுள்ள நிலம்போல ஆக வேண்டும் என்ற வாஞ்சை ஒருவனுக்கு இருக்குமாயின், "தாகமுள்ளவன்மேல் தண்ணீரையும், வறண்ட நிலத்தின்மேல் ஆறுகளையும் ஊற்றுவேன் உன் சந்ததியின்மேல் என் ஆவியையும், உன் சந்தானத்தின்மேல் என் ஆசீர்வாதத்தையும் ஊற்றுவேன். அதினால் அவர்கள் புல்லின் நடுவே நீர்க்கால்களின் ஓரத்திலுள்ள அலரிச்செடிகளைப்போல வளருவார்கள் (ஏசாயா 44:3-4) என்று தேவனாகிய கர்த்தர் கூறியிருக்கின்றார். பண்பட்ட நிலம் போல இருக்கும் இருதயத்தைக் கொண்டவன் தேவ அன்பு உடையவன். அவன் தேவனை அன்பு செய்வதால் பிறரையும் அன்பு செய்வான். பிறருடைய குற்றங்களை மன்னித்து அவர்களும் தேவ அன்பினை கண்டடையும்படி, தெய்வீக ஒளி வீசும் சுடராகத் திகழ்வான். அவன் பிறர்நலம் கருதி வாழ்ந்தாலும், அவர்களின் உலக முறைமைகளால் தன்னை கறைப்படுத்திக் கொள்ள மாட்டான். துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும் இருப்பான். கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதம் அவன் இருதயத்தின் தியானமாயிருக்கும். ஆதலால் ஆபத்தைக் கண்டு அஞ்சமாட்டான். சவால்களைக் கண்டு மருண்டு போகமாட்டான். ஜீவ வார்த்தைகளின் வேர் அவன் இருதயத்தில் ஆழமாய்ச் சென்றிருப்பதால், மகா வறட்சியான காலங்களிலும், (கடுமையான ஆவிக்குரிய போராட்டத்தின் நாட்கள்) தப்பாமல் தேவ சித்தத்தை செய்து முடிப்பான். அவனுடைய வாழ்க்கையின் பலன்களைக் கண்டு, பலரும் பரம பிதாவை மகிமைப்படுத்துவார்கள்.

**ஏசாயா 58:11**

கர்த்தர் நித்தமும் உன்னை நடத்தி, மகா வறட்சியான காலங்களில் உன் ஆத்துமாவைத் திருப்தியாக்கி, உன் எலும்புகளை நிணமுள்ளதாக்குவார் நீ நீர்ப்பாய்ச்சலான தோட்டத்தைப்போலவும், வற்றாத நீரூற்றைப்போல வும் இருப்பாய்.

**ஜெபம்**: அன்பின் பரலோக தேவனே, பண்பட்ட நிலத்தில் பெரும் விளைச்சல் உண்டாவது போல என் இருதயத்திலும் உம்முடைய வார்த்தை பலுகிப் பெருகத் தக்கதாக வழிடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நல்ல பொக்கிஷம்

இரண்டாம் உலக மாக யுத்தம் முதலாவதாக எங்கே ஆரம்பித்தது என்று கேட்டால், இன்ன இடத்திலே, இந்த நாடுகளுக்கிடையிலே, குறிப்பிட்ட காரணத்திற்காக ஆரம்பித்தது என்று கூறுவார்கள். ஆனால், அந்த யுத்தம் ஒரு நாட்டிலுள்ள ஒரு குறிப்பிடப்பட்ட பட்டணத்தில் ஆரம்பிக்க முன், பல மனிதர்களின் இருதயத்திலே முன்னதாகவே ஆர ம்பிக்கப்பட்டுவிட்டது. அதன் வெளி யரங்கமான விளைவையே நாங்கள் கேள்விப் படுகின்றோம். அப்படியே, நாவானது சிறிய அவயவமாயிருந்தும் பெருமையானவைகளைப் பேசும். பாரு ங்கள், சிறிய நெருப்பு எவ்வளவு பெரி ய காட்டைக் கொளுத்திவிடுகிறது! ஒரு மனிதன் நாவினாலே பிதாவாகிய தேவ னைத் துதிக்கலாம் அல்லது அவர் சாயலாக உருவாக்கப்பட்ட மனிதனை சபிக்கலாம். ஆனால் அவையெல்லாம் எங்கே இருந்து வருகின்றது? நல்ல மரமானது கெட்ட கனி கொடாது, கெட்ட மரமானது நல்ல கனி கொடாது. அந்தந்த மரம் அதனதன் கனியினால் அறியப்படும் முட் செடிகளில் அத்திப்பழங்களைப் பறிக்கிறதுமில்லை, நெருஞ்சிச்செ டியில் திராட்சப்பழங்களைப் பறிக்கிறதுமில்லை. நல்ல மனுஷன் தன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லதை எடுத்துக் காட் டுகிறான் பொல்லாத மனுஷன் தன் இருதயமாகிய பொல்லாத பொக் கிஷத்திலிருந்து பொல்லாததை எடுத்துக்காட்டுகிறான் இருதயத்தின் நிறைவினாலே வாய் பேசும். (லூக்கா 6:43-45). எடுத்துக் காட்டாக ஒருவன் உங்களோடு சண்டைக்கு வரும் போது, உங்கள் இருதய த்தில் என்ன இருக்கின்றது என்பது அப்போது உங்களிலிருந்து வெளி ப்படும். சண்டையில் (பிசாசானவன் தொடுக்கும் யுத்தத்தில்) நீங்கள் வெற்றி பெற வேண்டும் என்றால் தேவ சித்தம் உங்களில் நிறைவேற வேண்டும். யுத்தம் மனிதனுடைய இருதயத்திலிருந்து ஆரம்பிப்பது போல, அத ற்குரிய வெற்றியும் இருதயத்திலிருந்து வருகின்றது. தன் இருத யத்தை தேவ வார்த்தைகளின்படி காத்துக் கொள்கிறவன் தேவ னுக்குப் பயந்து அவர் வழிகளில் நடக்கின்றபடியால், அவன் பாவம் செய்ய மாட்டான். அவன் தேவ சித்தத்தை செய்யும்படி சேனைகளின் கர்த்தரின் நல்ல போர்வீரனாக உலகத்தையும் அதன் போக்குக ளையும் ஜெயம் கொள்ளுவான்.

**லூக்கா 6:45**

**நல்ல மனுஷன் தன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லதை எடுத்துக் காட் டுகிறான்.**

**ஜெபம்**: பராக்கிமமுள்ள தேவனே, உம்முடைய சித்தம் செய்யும் நல்ல போர்ச் சேவகனாய் வாழும்படிக்கு என் இருதயத்தை நீர் விரும்பும் நல்ல பொக்கிஷமாக மாற்ற என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட் சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நல்ல போர்ச் சேவகனாய்...

இராஜபக்தியுள்ள ஒரு இளைஞன் தான் நாட்டிற்கு சேவை செய்ய வேண்டும் என்ற வாஞ்சையுடன் நாட்டின் பட்டாளத்திலே இணைந்து கொண்டான். அந்த இளைஞனுடைய தேசப்பற்றையும், தன் அரசனை குறித்த விசுவாசத்தையும் கண்ட தளபதி, அவனை அரண்மனையில் பாதுகாவலர் குழுவிலே சேர்த்துக் கொண்டான். நாட்டிலே பலவி தமான நன்மை தீமையான சம்பவங்கள் நடைபெற்றாலும், காலநிலை எப்படியாக இருந்தாலும், நாட்டின் பொருளாதார நிலைமையானது உயர் வாகவோ அல்லது தாழ்வாகவோ இரு ந்தாலும், சகபோர்வீரர் சோர்ந்து போ னாலும் அந்த இளம் போர்வீரனின் எண்ணமும், ஏக்கமும் எப்போதும் தான், தன் அரசனை பாதுகாக்க வேண்டும் என்பதாகவே இருந்தது. அதாவது, தன் னுடைய வேலைக்கு அடுத்த அலுவல்களினால் தன் நோக்கத்தை குலைத்துப் போடாமல் தன்னுடைய எஜமானனுக்கு பிரமாணிக்கமுள்ள வனாக இருந்தான். "தண்டில் சேவகம்பண்ணுகிற எவனும், தன்னைச் சேவகமெழுதிக்கொண்டவனுக்கு ஏற்றவனாயிருக்கும்படி, பிழைப்புக் கடுத்த அலுவல்களில் சிக்கிக்கொள்ளமாட்டான்." எனவே, பாடுகள் வந் தாலும், வேதனை துன்பங்கள் வந்தாலும், உன்னை அழைத்த கர்த் தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு நல்ல போர்ச் சேவகனாக இருக்கும் படி அவைகளை கிறிஸ்துவின் நிமித்தம் சகித்துக் கொண்டு, இலக் கின்மேல் கண் வைத்து ஓடு என்று தீமோத்தேயு என்னும் ஊழியரு க்கு பவுல் அறிவுரை கூறியிருக்கின்றார். நாங்களும் எங்களைத் தம் முடைய மாறாத அன்பினால் தெரிந்து கொண்ட எஜமானனாகிய இயேசு கிறிஸ்துவுக்கு விசுவாசமுள்ள நல்ல போர்ச் சேவகர்களாக இருக்க வேண்டும். ஒரு பட்டாளத்திலே உள்ள போர்வீரர்கள் ஒரு வரோடொருவர் முரண்பாடாக இருந்தால், எதிரியானவன் இலகுவாக அந்த பட்டாளத்தை மேற்கொண்டு விடுவான். எனவே, நாங்கள் ஒரு மனதோடு இசைந்த ஆத்துமாக்களாக தேவன் எங்களை அழைத்த நோக் கத்தையே சிந்தையில் வைத்தவர்களாக முன்னேறிச் செல்ல வேண் டும். எங்கள் அழைப்பின் நோக்கத்தை கெடுத்துப் போடும் எந்த ஒரு காரியத்திலும் நாங்கள் சிக்கிக் கொள்ளாதபடிக்கு, அவைகளை எங்கள் மாம்ச பெலத்தினால் அல்ல, தூய ஆவியானவரின் வல்ல மையால் மேற்கொண்டு முன்னேறுவோம்.

**2 தீமோத்தேயு 2:3**

நீயும் இயேசுகிறிஸ்துவு க்கு நல்ல போர்ச்சேவக னாய்த் தீங்கநுபவி.

**ஜெபம்**: அன்பின் பரலோக தந்தையே, விசுவாசமுள்ள நல்ல போர்ச் சேவகனைப் போல, பாடுகள் வந்தாலும், தயங்காமல் உம் சித்தத்தை என் வாழ்வில் நிறைவேற்றி முடிக்க என்னை வழிநடத்துவீராக. இரட் சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

புதன் | மார்கழி 11

📖 மாலை வாசகம் – யோவான் 15:18–19

# ஆவிக்குரிய மனுஷன்

> **1 கொரிந்தியர் 2:15**
>
> **ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான்**

ஒரு ஊரில் வாழ்ந்து வந்த சமுதாய அந்தஸ்துள்ள மனிதன், தேவனுடைய வார்த்தையைக் கேட்டு அதை ஏற்றுக் கொண்டு, அவ்வூரிலுள்ள சபை ஐக்கியம் ஒன்றிலே இணைந்து கொண்டான். அந்த சபையிலுள்ள மனிதர் களும், அந்த மனிதனை கனத்துடன் வரவேற்றார்கள். சில ஆண்டுகளுக்கு பின், அந்த சபையின் ஊழியர் வேறு இடத்திற்கு மாற்றப்பட்டதால், இன்னுமொரு ஊழியர் அந்த சபையின் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டார். இதை அறிந்து கொண்ட அந்த சமுதாய அந்தஸ்துள்ள மனிதனின் முகநாடி வேறுபட்டது. இந்தப் புதிய ஊழியன் தெருவின் அந்தப்பகுதியிலே வறுமையிலும் தாழ்ச்சியிலும் இருந்தவன் இப்போது எங்களுக்கு தேவ நீதியை போதிக்கப் போகின்றானா? இதையெல்லாம் இவன் எப்போது அறிந்து கொண்டான் என்று கூறிக் கொண்டார். இதே போலவே, இயேசு இந்த உலகத்திலே இருந்த நாட்களிலே, ஆலயத்தில் இருந்தவர்கள் அவர் போதிப்பதை கேட்ட போது, இவன் தச்சனுடைய குமாரன் அல்லவா? இவன் தாய் மரியாள் என்பவள் அல்லவா? யாக்கோபு யோசே சீமோன் யூதா என்பவர்கள் இவனுக்குச் சகோதரர் அல்லவா? இவன் சகோதரிகள் எல்லாரும் நம்மிடத்தில் இருக்கிறார்கள் அல்லவா? இப்படியிருக்க, இதெல்லாம் இவனுக்கு எப்படி வந்தது? என்று சொல்லி, அவரைக் குறித்து இடறலடைந்தார்கள். (மத்தேயு 13:54-58). பிரியமானவர்களே, ஜென்மசுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான் அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும். இந்த உலக போக்கின்படி சிந்திக்கின்றவர்கள், இந்த உலகத்திற்குரியவைகளை ஏற்றுக் கொள்கின்றார்கள். ஆனால் அவர்கள் தங்களை அறியாமலே தேவனுக்குரியவைகளை பகைக்கின்றார்கள். நாங்களோ உலகத்தின் ஆவியைப்பெறாமல், தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்கு தேவனிலிருந்து புறப்படுகிற ஆவியையே பெற்றோம். எனவே தேவனுடைய சித்தம் இந்த பூமியிலே, எங்கள் சபையிலே, எங் கள் குடும்பத்திலே, எங்கள் தனிப்பட்ட வாழ்க்கையிலே நிறைவேறுவதற்கு நாங்கள் இடறலாக இல்லாதபடிக்கு, ஆவிக்குரிய மனக் கண்களால், தேவனுக்குரியவைகளை இன்னதென்று நிதானித்து அறிந்து அவைகளின் வழி நடப்போம்.

**ஜெபம்**: சகலமும் அறிந்த தேவனே, உம்முடைய ஆவியினாலன்றி, ஒருவனும் உமது வழிகளை அறியமாட்டான், ஆதலால், உம்முடைய வழிகளை அறியும்படி பிரகாசமுள்ள மனக்கண்களை தந்து நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்

வியாழன் | மார்கழி 12

📖 மாலை வாசகம் – அப் 4:13

# தேவ ஊழியன் யார்?

ஒரு சமயம், ஆலய வாசலிலே சப்பாணியாக இருந்த மனிதன் ஒருவனை, பேதுருவும் யோவானும், இயேசுவின் நாமத்தினாலே குணப்படுத்தியபடியால், யூத மதத் தலைவர்கள் அவர்களைப் பிடித்து, ஆலோனை சங்கத்திற்கு முன்பாக நிறுத்தி அவர்களை விசாரணை செய்தார்கள். அந்த வேளையிலே பேதுருவும் யோவானும் பேசுகிற தைரியத்தை அவர்கள் கண்டு, அவர்கள் படிப்பறியாதவர்களென்றும் பேதமையுள்ளவர்களென்றும் அறிந்தபடியினால் ஆச்சரியப்பட்டு, அவர்கள் இயேசுவுடனே கூட இருந்தவர்களென்றும் அறிந்து கொண்டார்கள். அவர்கள் இயேசுவோடு கூடவே இருந்த நாட்களில், இயேசுவின் வருகையின் மறைபொருளை அறியாதவர்களாயும், தேவனுடைய ராஜ்யம் எப்படிப்பட்டதென்பதை உணராதவர்களாயுமிருந்தார்கள். ஆனால், வாக்களிக்கப்பட்ட பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றபின்பு இந்த உலகத்தின் கல்விமான்கள் கண்டு, அதிசயிக்கதக்கவிதமாக அவர்கள் பேச்சு கருத்துள்ளதாகவும் வல்லமை நிறைந்ததாகவும் இருந்தது. பிற்பாடு, பவுல் என்னும் மனிதனை கர்த்தர் தன் பணிக்காக ஏற்படுத்தினார். பவுல் என்னும் மனிதனோ யூதர்களின் வேதப் பிரமாணங்களை முறைப்படி கற்று பாண்டித்தியம் பெற்றவர். ஆனால் இயேசுவின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து, தன்னை ஒப்புக் கொடுத்து, பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை பெற முன்பு, அவருடைய ஆவிக்குரிய கண்களோ குருடாக இருந்தது. இயேசு யார் என்பதைக் குறித்து அறிவதற்கு அவருடைய கல்வி அவருக்கு உதவி செய்யவில்லை. “என் பேச்சும் என் பிரசங்கமும் மனுஷஞானத்திற்குரிய நயவசனமுள்ளதாயிராமல், தேவ ஆவியினாலும் பெலத்தினாலும் உறுதிப்படுத்தப்பட்டதாயிருந்தது என்று அப்போஸ்தலராகிய பவுல் கூறியிருக்கின்றார்.இந்த உலகத்தின் ஒழுங்கின்படி நாங்கள் கல்வி கற்றிருக்கலாம் அல்லது உலகத்திற்கு பேதமையுள்ளவர்களாக இருக்கலாம். கர்த்தர் ஒருவனை தம் பணிக்காக அபிஷேகித்து நியமித்தால் வேறொருவனும் அந்த ஊழியக்காரனை எதிர்த்து மேற்கொள்ள முடியாது. அதுபோலவே கர்த்தர் ஒருவனை நியமிக்காவிட்டால் அவன் பிரயாசம் யாவும் விருதாவாயிருக்கும்.

**1 கொரிந்தியர் 2:5**

என் பேச்சும் என் பிரசங்கமும் மனுஷ ஞானத்திற்குரிய நயவசனமுள்ளதாயிராமல், ஆவியினாலும் பெலத்தினாலும் உறுதிப்படுத்தப்பட்டதாயிருந்தது.

**ஜெபம்:** பரிசுத்தமுள்ள தேவனே, இந்த உலகத்தின் அளவுகோலின்படி உம்முடைய ஊழியத்தை நான் செய்யாமல், நீர் நியமித்த ஒழுங்கின் படி உம்முடைய பணியை நிறைவேற்ற எனக்கு உதவி செய்யும். இர ட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தேவனே ஞானத்தை அருளுவார்

> **1 கொரிந்தியர் 1:27**
>
> ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்துகொண்டார்.

"இந்த உலகத்தின் சாஸ்திரங்களுக்கமைய பிறப்பிலேயே குடும்பத்தினால் புறக்கணிக்கப்பட்டேன். உறவினர்கள் என்னை துர்அதிஷ்டமானவன் என்று அழைத்தார்கள். சமுதாயம் என்னை ஏற்றுக் கொள்ளவில்லை" என்றிருந்தவர்களையே தேவன் தம்முடைய மகிமையான ஊழியத்திற்கு அழைத்து, உயர்த்தி வைத்தார் என்ற அனுபவ சாட்சிகளை நாம் கேட்டிருக்கின்றோம். எளிமையும், சிறுமையும், அற்பமுமாய் எண்ணப்பட்டு, மேய்ப்பனில்லாத ஆடுகளைப் போல வாழ்க்கையில் சமாதானத்தைத் தேடி அலைந்து திரிந்து, துன்மார்க்க வழிகளில் தங்கள் வாழ்க்கையை அழித்துக் கொண்டு, தற்கொலையே முடிவு என்றிருந்தவர்களைக் கூட உருக்கமாய்த் தேற்றி அணைத்துக் கொண்டார். அந்த நாளிலே எவருடைய கணக்கிலும் இல்லாதிருந்த இவர்களுக்கு, பாடசாலைக்கு சென்று கற்பதற்குரிய வசதி ஏதும் இல்லாதிருந்தது. அழைத்த தேவன் இவர்களுக்கு தேவ ஞானத்தைக் கொடுத்தார். அவர்களை தமக்குகந்த பாத்திரங்களாகப் பயன்படுத்தினார். தூய ஆவியினால் அபிஷேகித்து வியக்கத்தகு அற்புதங்களைச் செய்தார். நாட்டின் அதிகாரிகள், உலக கல்விமான்கள் அவர்களைத் தேடி வரும்படி தேவன் வழியை ஏற்படுத்தினார். முன்பு ஒரு பொருட்டாக எண்ணப்படாத இவர்கள், பல்கலைக்கழக வாயில் அருகே செல்வதற்குக்கூட அனுமதிக்கப்படாதிருந்தவர்களை, அழைத்து பல பல்கலைக்கழகங்கள் கௌரவ கலாநிதி பட்டங்களை கொடுக்கின்றது. பிரியமானவர்களே, ஒருவேளை வேதாகம கல்லூரிக்கு சென்று முறைப்படி வேதபாடங்களை கற்கக்கூடிய அனுமதியும் நிர்வாகமும் உண்டானால் அதைச் செய்யுங்கள். அப்படியான சலுகை உங்களுக்கு இல்லாதிருந்தால் கவலையடையாதிருங்கள். அழைத்த தேவனுடைய சித்தத்தை நிறைவேற்ற எங்களுக்கு என்ன தேவை என்பதை அவர் அறிந்திருக்கின்றார். அன்று அவருடைய சீஷர்கள் மேல் பொழியப்பட்ட பரிசுத்த ஆவியினால் இன்றும் தம்முடையவர்களை அபிஷேகம் செய்கின்றார். உள்ளவைகளை அவமாக்கும்படி, உலகத்தின் இழிவானவைகளையும், அற்பமாயெண்ணப்பட்டவைகளையும், இல்லாதவைகளையும், தேவன் தெரிந்துகொண்டார். வாஞ்சையுள்ளவர்களுக்கு தம்முடைய இரகசியங்களை வெளிப்படுத்தி நடத்துகின்றார்.

**ஜெபம்:** உன்னதமான தேவனே, நீர் உன்னதத்திலே வாழ்ந்தாலும், சிறுமைப்பட்ட எங்களை நினைவுகூர்ந்து அழைத்தீர். இந்த உலகிலே உம்முடைய சித்தத்தை செய்ய, தூய ஆவியின் வல்லமையை தந்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# மேலானவைகளை நாடுங்கள்

தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார். ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்து, அவர்களுக்கு நீடுழியாய் வாழும் படிக்கே **ஜீவனைக்** கொடுத்தார். நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, அவற்றிலுள்ளவைகளை ஆண்டு கொள்ளுங்கள் என்று **ஆசீர்வதித்தார்**. அவர்களோ ஜீவனையும், ஆசீர்வாதத்தையும் தங்கள் கீழ்ப்படியாமையினாலே இழந்து போனார்கள். அன்று முதல் இன்றுவரை மனிதன் இந்த உலகிலே பல காரியங்களை நாடித் தேடி கண்டு பிடித்திருக்கின்றான். மனிதன் ஒன்றுமில்லாததிலிருந்து ஒன்றை உருவாக்கும் ஆற்றல் உடையவனல்ல. அதாவது, தேவன் மனிதர்களுக்கு கொடுத்த அறிவு ஆற்றலைப் பயன்படுத்தி, இந்தப் பூமியிலே இருக்கும் மூலவளங்களை பயன் படுத்தியே, பல ஆராய்ச்சிகளைக் செய்து புதிய காரியங்களை கண்டு பிடிக்கின்றார்கள். எடுத்துக்காட்டாக, மனிதன் மின்சாரத்தையும் கண்டு பிடித்தான். அவை இந்த பூமியிலுள்ள மூல வளங்களைக் கொண்டே உற்பத்தி செய்யப்படுகின்றது. அந்த ஆக்கத்தில் நன்மைகள் உண்டு. அதே நேரத்திலே, பல பக்கவிளைவுகளும் உண்டு. மின்சார தாக்குதலினாலே அநேகர் மரித்து போகின்றார்கள். பல கட்டிடங்கள் எரிந்து சாம்பலாய்ப் போகின்றது. பிளாஸ்டிக் (Plastic) பொருட்களை கண்டுபிடித்தான், ஆனால் இன்று அவைகளினால் வரும் நன்மைகளைவிட, பூமிக்கும் மனிதனுக்கும் பல தீமைகளே உண்டாகின்றது என அவனே கூறுகின்றான். இப்படியாக மனிதனுடைய எல்லா ஆக்கங்களிலும் அநேக பாதகமான தாக்கங்கள் உண்டு. எனினும் தன்னுடைய ஆக்கங்களை குறித்து மனிதன் எப்போதும் பெருமைபாராட்டிக் கொண்டிருக்கின்றான். ஆனால் இவை யாவும் மனிதனுக்கு அவன் விரும்பும் மனச் சமாதானத்தைக் கொடுப்பதில்லை. பூமிக்குரியவைகள் யாவும் ஒரு நாள் அழிந்து போகும். இப் போதுள்ள நவீன உலகத்திற்கு முன்பும், தேவனுடைய பரிசுத்தவான்கள், இந்தப் பூமியிலே மனச்சமாதானத் தோடு வாழ்ந்து கடந்து சென்றிருக்கின்றார்கள். ஆனால், அழியாததும் நித்தியமானதுமான மேலானவைகளையே நாங்கள் நாடித் தேட வேண்டும். மனிதன் ஆதியிலே இழந்து போன நித்திய ஜீவனையும், நித்தியமான ஆசீர்வாதத்தையும் மறுபடியும் பெற்றுக் கொளளும்படி இயேசு கிறிஸ்து ஒருவரே வழியை உண்டு பண்ணியிருக்கின்றார்.

**கொலோசெயர் 3:2**

பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள்.

**ஜெபம்**: அன்பின் தேவனே, இந்த உலகத்தையும் அதன் மேன்மையையும் நாடித்தேடாமல், கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிரு க்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேட என்னை உணர்வுள்ளவனா(ளா)க்கும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# வாழ்வு தரும் வழி

இன்று விஞ்ஞானிகள் மட்டுமல்ல, இந்த உலகிலே வாழும் மனிதர்கள் யாவரும் பல காரியங்களை கண்டுபிடிக்கும்படி பிரயாசப்படுகின்றார்கள். பலர் பிழைப்புக்கு புதிய வழிகளை தேடுகின்றார்கள். இன்னும் பலர் உல்லாசமாக வாழ்வதற்குரிய பல கொள்கைகளை தங்களுக்கென வகுத்து, அதற்கேற்ற சுற்றாடலைத் தேடுகின்றார்கள். வேறு பலர் நான் கற்க வேண்டும் அறிவடைய வேண்டும் என்று கடுமையாகப் பிரயாசப் படுகின்றார்கள். இவைகளினாலே ஏதோ ஒரு காரியம் தங்களுக்கு கிடைக்குமெனவும், அதனால் மனத்திருப்தி உண்டாகும் எனவும் எண்ணிக் கொள்கின்றார்கள். எங்களுடைய தேவை என்ன என்பதை பரம பிதா அறிந்திருக்கின்றார். மனிதனுக்கு செம்மையாக தோன்றும் வழிகள் உண்டு. அவன் அந்த வழிகளிலே சென்று பலவிதமான காரியங்களை கண்டு பிடிக்கலாம். அவை பொருட்களாகவோ, கோட்பாடுகளாகவோ, தத்துவங்களாகவோ, வாழ்க்கை முறைகளாகவோ இருக்கலாம். ஒரு மனிதன் தன் வாழ்விற்கு செய்யக் கூடிய மகா பெரிதான கேடு விளைவிக்கும் கண்டுபிடிப்பு என்ன? தேவன் இல்லையென்று கூறி, வேத பிரமாணங்களுக்கு எதிரான கொள்கைகளை, தத்துவங்களை, கோட்பாடுகளை கூறிக் கொள்வதே, அவன் தன் ஆத்துமாவிற்கு எதிராக கண்டுபிடித்த பெரிதான தீமையாக இருக்கின்றது. கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது் அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர். அது பார்வைக்கு இன்பமும், புத்தியை தெளிவிக்கின்றதும் போல இருக்கும். ஆனால் அதன் முடிவில் நித்தியமான அழிவு உண்டு. ஒரு மனிதன் தன் வாழ்விற்கு செய்யக் கூடிய மகா பெரிதான நன்மையை உண்டுபண்ணும் கண்டு பிடிப்பு என்ன? முடிவில்லாத வாழ்வைத் தரும் வழியை கண்டுபிடிப்பதே அவன் தன் ஆத்துமாவிற்கு செய்யக்கூடிய மகா பெரிதான கண்டுபிடிப்பு. நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான், அவன் உள்ளும் புறம்பும்சென்று, மேய்ச்சலைக் கண்டடைவான் என்று இயேசு கூறியிருக்கின்றார். அந்த வாசலை கண்டு பிடித்து, அதன் வழியாய் பிரவேசிப்பனே, ஆன்மீக திருப்தியைக் கண்டடைவான்.

**மத்தேயு 7:14**

**ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்.**

**ஜெபம்:** உன்னதமான தேவனே, வாழ்வு தரும் வழியாகிய இயேசு கிறிஸ்துவை நான் கண்டடையும்படி நீர் செய்த மகா பெரிதான உம்முடைய கிருபைக்காக நன்றி. அந்த வழியிலே வெற்றி வாழ்க்கை வாழ என்னை வழிநடத்திச்செல்வீராக.இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன்ஆமேன்.

**திங்கள் | மார்கழி 16** 📖 மாலை வாசகம் – எபிரெயர் 12:1

# தேவனால் உண்டான இரட்சிப்பு

இயேசு இந்த உலகத்திலே வாழ்ந்த நாட்களிலே அநேக பிணியாளிகளும், பாவிகளும், அசுத்த ஆவிகள் உள்ளவர்களும் அவரிடத்திலே வந்தார்கள். அவர் பிணியாளிகளை சுகப்படுத்தினார். பாவிகளை மன்னித்தார். அசுத்த ஆவி பிடித்தவர்களை விடுதலையாக்கினார். இவர்கள் தங்கள் வாழ்க்கையில் ஒருபோதும் கண்டிராத அதிசயங்களையும் அற்புதங்களையும் கண்டார்கள். அந்த அற்புதங்கள் வழியாக அநேகர் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள். அதாவது, அவருடைய வார்த்தையை மனதார ஏற்றுக் கொண்டு, அவருடைய கற்பனைகளை தங்கள் வாழ்வில் கைக்கொள்ளும்படி தங்களை அர்ப்பணித்தார்கள். ஆனாலும் அங்கிருந்தவர்களில் பலர் அவர் எப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்தாலும், தங்கள் இருதயங்களை கடினப்படுத்திக் கொண்டார்கள். அந்த நாட்களில் மட்டுமல்ல, இன்றும் இயேசு தம்முடைய ஊழியர்கள் வழியாக அற்புதங்களைச் செய்கின்றார். அதன் வழியாக பலர் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டிருக்கின்றார்கள். இவர்களில் விஞ்ஞானமே மெய்ஞானம் என்று கூறும் மனிதர்களும் அடங்குவார்கள். தேவன் இல்லை என்று வாழ்ந்த இவர்கள், தங்கள் ஆராய்ச்சிகள் வழியாக, வேதத்திலே கூறப்பட்டவைகளுக்கு ஆதாரங்களை கண்டு பிடித்ததால், அவர்களது கண்கள் திறக்கப்பட்டு, தேவன் மேல் விசுவாசம் கொண்டிருக்கின்றார்கள். இந்த செயல் அவர்களின் வாழ்வில், தேவன்மேல் விசுவாசத்தை உண்டுபண்ணும் ஒரு திருப்புமுனையாக இருந்தது. எந்த ஆதாரமோ, அவர்கள் கண்ட எந்த அற்புதங்களோ அவர்களை இரட்சிக்கவில்லை, தேவனுடைய கிருபையினாலே உண்டான அற்புதங்கள் ஆதாரங்கள் வழியாகவே அவர்கள் இருதயத்திலே விசுவாசம் உருவாக்கப்பட்டது. ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல. அப்படியாக தேவன் மேல் உண்மையான விசுவாசம் வைத்தவர்கள் மேற்கொண்டு தேவனை விசுவாசிப்பதற்கு இன்னும் ஆதாரங்களை தேடமாட்டார்கள். அவர்கள், விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, அவர்களுக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடுவார்கள்.

**எபேசியர் 2:8**

கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள் இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு.

**ஜெபம்:** பரலோக தேவனே, நீரே விசுவாசத்தை தொடக்குகின்றவரும் அதை எங்களில் நிறைவேற்றி முடிக்கின்றவருமாயிருக்கின்றீர் என்ற உண்மையை உணர்ந்து உம்மை சார்ந்து வாழ கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

செவ்வாய் | மார்கழி 17

📖 மாலை வாசகம் – ஏசாயா 55:11

# வேதம் குறைவற்றது

தேவனுக்கு பிரியமான கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்வதற்கு இன்னும் ஆதாரங்களை தேடுகின்றீர்களா? தேவனாகிய கர்த்தர் தாமே, மனிதனை தன்னுடைய சாயலில் உருவாக்கினார் என்று பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது. இது தேவனுடைய வார்த்தை. இதற்கு விரோதமாக தங்களை உலகத்தின் ஞானிகள் என்று கூறுபவர்களில் ஒருவர், மனிதன் குரங்கிலிருந்து கூர்ப்படைந்தான் என்னும் கோட்பாட்டை ஏற் படுத்தினார். இது தேவனுடைய வார்த் தைக்கு விரோதமான கூற்று. "தேவன் நோவாவை பேழைக்குள் வைத்து காத்துக் கொண்டார்." இது சத்திய வேதம் கூறும் உண்மை. இதை நம்பு வதற்கு நாங்கள் இன்னும் ஆதாரங் களை தேடினால், நாங்கள் தேவனு டைய வார்த்தையை அசட்டை செய்கி ன்றவர்களாக இருப்போம். நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கிறோம். கர்த்தருடைய வேதம் குறைவற்றது! வானமும் பூமியும் ஒழிந்துபோம், தேவனுடைய வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை. எனவே தேவன் விளம்பிய வேதத்தை உறுதிப் படுத்துவதற்கோ அல் லது மெருகூற்றுவதற்கோ மனிதனுடைய எந்த உலக ஞானமும் அற்ப மானது. மனிதனுடைய வாழ்நாட்கள் கர்த்தருடைய கரத்திலிருக்கி ன்றது. "**ஒருவரும் கெட்டுப்போகாமல்**" அதாவது, தேவன் இல்லை என்று சாதிக்கின்றவர்களும், உலக ஞானத்தை நம்பி வாழ்கின்ற வர்களும், துன்மார்க்கரும், சன்மார்க்கரும், பாவிகளும், உண்மையான தேவன் யார் என்று அறியாமல் வாழ்பவர்களும் இரட்சிப்படைய வேண்டும் என்பதற்காகவே, யாவர்மேலும் நீடிய பொறுமையுள்ளவராக இருக்கின்றார். ஆனால் சில மனிதர்களோ, தேவனுடைய நீடிய பொறு மையை அசட்டை செய்து, தற்போதுள்ள கிருபையின் காலத்திலே, தேவனுக்கு விரோதமான வார்த்தைகளை பேசுகின்றார்கள். இன்னும் பலரை தங்கள் வழியில் இழுத்துக் கொள்கின்றார்கள். பிரியமானவர் களே, மறுபடியும் தேவனை விசுவாசிப்பதற்கு உலக ஞானத்தையும், அடையாளங்களையும், ஆதாரங்களையும் நாடித் தேடாமல் தேவன் எங்களுக்கு கிருபையாய் கொடுத்த வாழ்நாட்களை, வீணாக்காதபடி க்கு, வேத வார்த்தைகளை ஏற்றுக் கொண்ட நாங்கள், அந்த வார்த் தைகளை விசுவாசித்து நடக்கக்கடவோம். பிதாவாகிய தேவனுடைய சித்தத்தை எங்கள் வாழ்வில் நிறைவேற்றுவோம்.

**சங்கீதம் 19:7**

கர்த்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது.

**ஜெபம்**: பரலோக தேவனே, உம்முடைய கிருபையினாலே எங்களுக்கு இரட்சிப்பைத் தந்தீர். இனிமேல் ஆதாரங்களையும் அடையாளங்களையும் தேடாமல், உம் வார்த்தையை விசுவாசித்து நடக்க என்னை பெலப்படு த்தும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

**புதன் | மார்கழி 18** 📖 மாலை வாசகம் – யோவான் 3:19–20

# சிலுவையைப்பற்றிய உபதேசம்

முன்னே பாவத்தினாலே மரித்துப் போய் தேவனைவிட்டு தூரமாயிருந்தோம். பரலோகத்திற்கு செல்ல முடியாதபடிக்கு எங்களுக்கும் பரலோகத்திற்கும் இடையிலே பெரிதான பிரிவினையாகிய நடுச்சுவர் இருந்தது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தாமே, எங்கள் பாவங்களை தம்மேல் ஏற்றுக் கொண்டு, தம்மைத் தாமே பலியாக ஒப்புக்கொடுத்தார். அவர் சிலுவையிலே சிந்திய இரத்தத்தினாலே பரம பிதாவோடு எங்களை ஒப்புரவாக்கி சமாதானத்தை உண்டுபண்ணினார். பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்து, பரலோகம் செல்லும் புதிய ஜீவ மார்க்கத்தை உண்டு பண்ணினார். மீட்ப்பின் ஒளியானது தங்களுடைய வாழ்க்கையில் வந்திருந்தும் தங்கள் இருதயத்தை கடினப்படுத்தி, தங்களது ஆத்துமாவை கேட்டுக்கு ஒப்புக்கொடுகின்றவர்களுக்கு, சிலுவையைப் பற்றிய இந்த உபதேசம் பைத்தியமாக தோன்றுகின்றது. எனவே, இதைப் பின்பற்றுகின்ற எங்களை பைத்தியம் என்றும், தங்களை இந்த உலகத்தின் ஞானிகள் என்றும் எண்ணிக் கொள்கின்றார்கள். அவர்கள் உலகத்தின் ஞானிகள் என்பது உண்மை. ஆனால், அவர்களது உலக ஞானத்தினால் நித்திய வாழ்வின் வழியை அவர்களால் உணரமுடியாமல் இருக்கின்றது. ஆனால் அவர்களுக்கு பைத்தியமாக தோன்றுகின்றவை, எமக்குத் தேவ தயவினாலே அருளப்பட்ட தெய்வீக ஞானத்தினால், எங்கள் மனக்கண்கள் திறக்கப்பட்டதினாலே சிலுவையை பற்றிய உபதேசம் எங்களுக்கு பெலமுள்ளதாயிருக்கின்றது. எங்கள் பெலவீன நேரங்களிலே சிலுவையின் நிழலிலே நாங்கள் பெலனடைகின்றோம். உலகத்தினாலான பெரிதானதாய்க கனப்படுத்தப்படும் சுயஞானத்தினாலே தேவனை அவர்கள் அறியமுடியாதிருக்கையில், அவர்களுக்கு பைத்தியமாக தோன்றும் சிலுவையின் உபதேசத்தினாலே விசுவாசிகளை இரட்சிக்க தேவனுக்குப் பிரியமாயிற்று. எனவே உலகத்தார் உங்களை பார்த்து பரிகாசம் பண்ணும் போது, அவர்கள் நாங்கள் பெற்றுக் கொண்ட தெய்வீக ஞானத்தை அவர்களும் பெறும்படியாக அவர்களுக்காக வேண்டுதல் செய்வோம்.

**1 கொரிந்தியர் 1:18**

சிலுவையைப்பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவ பெலனாயிருக்கிறது.

**ஜெபம்**: அன்பின் தேவனே, இந்த உலகத்தின் ஞானிகளின் அறிவுக்கெட்டாத உண்மையை நாங்கள் அறியத்தக்கதாக எமக்கு கிருபை செய்தீர். அந்த உண்மையின் வழியிலே வாழ எம்மை நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தயவைக் காண்பியுங்கள்

எத்தனை வருடங்களாக நண்பர்களாக இருந்தோம். எத்தனை நன்மைகளை என்னிடத்தில் பெற்றுக் கொண்டான் ஆனால் இன்று எனக்கு துரோகம் செய்து விட்டான் என்று தன்னுடைய நண்பனைக் குறித்து பல நாட்களாக ஒரு மனிதன் மிகவும் குழப்படைந்திருந்தான். இப்படியாக இருக்கின்ற வேளையிலே, ஒரு நாள் இரவு ஆகாரத்தை உண்ணும் போது, அன்றைய ஆகாரத்திலே உப்பு மிகவும் அதிகமாக இருந்ததால், கோபமடைந்து தன் மனைவியை மிகவும் கசந்து கொண்டான். தன் கணவரின் மனநிலையை உணர்ந்த மனைவியோ மௌனமாக இருந்தாள். ஆனால் அவர்களுடைய மூத்த மகள் தயவுடன் தந்தையாரை நோக்கி: "அப்பா இத்தனை வருடங்களாக அம்மா எத்தனை சுவையுள்ள ஆகாரத்தை சமைத்துத் தந்தார், ஆனால் இன்றைய ஆகாரமானது சற்று பிழைத்து விட்டதற்காக ஏன் இப்படி அம்மாவை கடிந்து கொள்கின்றீர்கள்" எனக் கூறினாள். இருளிலே திடீரென வெளிச்சம் உதித்தது போல, அக்கணமே அம்மனிதனின் மனக் கண்கள் திறக்கப்பட்டது. "இத்தனை காலமாக என்னுடைய நண்பன் எனக்கும் எத்தனையோ உதவிகளை செய்தான். உயர்விலும் தாழ்விலும் என்னோடு கூட நடந்தான், ஆனால் இந்த ஒரு தடவை அறிந்தோ அறியாமலோ செய்த தவறினாலே நான் இத்தனை வருடங்களாக இருந்த நட்பை தூக்கி எறிந்து விட்டேனே என மனம்வருந்தினான். அடுத்த நாளே, தன் நண்பனோடு ஒப்புரவாகிக் கொண்டான். முன்பு இருந்ததைவிட அவர்களது நட்பு இப்போது இன்னுமொரு படி பெலனுள்ளாதாக மாறிவிட்டது. பிரியமானவர்களே, அன்பு என்றால் என்ன? நட்பு என்றால் என்ன? நன்மைக்கு மாத்திரம் நன்மை செய்வது அன்பு என்று கூறலாமா? செய்த தவறினால் நண்பன் இக்கட்டான சூழ்நிலையில் இருக்கும் போது, அவனைத் தள்ளிவிடுவது நட்பாகுமா? அப்படி இருக்கலாகாது. தன்னைப் போல மாறுகின்றவர்களை பிதாவாகிய தேவன் விரும்புகின்றார். தயவாய் மன்னியுங்கள் அப்போது பிசாசானவன் வெட்கமடைந்து தோற்றுப் போவான். உங்கள் பரம பிதா உங்களைக் குறித்து மிகவும் மகிழ்ச்சியடைவார்.

**எபேசியர் 4:32**

**ஒருவருக்கொருவர் தயவாயும் மனஉருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்தது போல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்.**

**ஜெபம்:** தயவுள்ள தேவனே, பூரணசற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக்கொண்டு, மற்றவர்களுடைய குற்றங்களை தயவாய் மன்னிக்கும்படிக்கு உணர்வுள்ள இருதயத்தைத் தந்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழி யாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ஆவிக்கேற்றபடி நடவுங்கள்

ஒரு ஊரிலே வசிக்கும் இரு அயல்வாசிகளுக்கிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடானது பெரும் வாக்குவாதத்தை கிளப்பிவிட்டது. தேவனை அறிந்த இருவரும் போதகர் முன்னிலையிலும், சபையோர் மற்றும் அயலவர் முன்னிலையில் தங்களை நீதிமான்களென்று நிரூபிப்பதற்காக சாட்சிகளை தேடுவதில் அதிக நேரத்தை செலவிட்டார்கள். அன்று மாலையிலே, இருவருடைய வீட்டிலும் அவர்களுக்கு ஆதரவாக சிறு சிறு குழுக்கள் சேர்ந்து விட்டது. நடந்த சம்பவத்தைக் குறித்து நடு இரவுவரைக்கும் அவரவர் வீடுகளிலே பேசிக் கொண்டிருந்தார்கள். ஆதரவளிக்க வந்தவர்களும், ஆண்டுகளுக்கு முன் நடந்து முடிந்த கசப்பான சம்பவங்களையும் உயிரடையச் செய்து, அவைகளைக் குறித்தும் பேசினார்கள். அந்நாட்களிலோ வேதப்புத்தகம் அவர்கள் வாழ்க்கையில் மூடப்பட்டாயிற்று. ஜெப நேரம் இரத்துச் செய்யப்பட்டாயிற்று. இந்த உலகிலே மனிதர்கள், நீதிமன்ற வழக்கிற்கு தங்களை ஆயத்தப்படுத்துவதுபோல இருவரும் தங்களுக்கென ஒரு கதையும், அந்த கதைக்கு சாட்சிகளையும் ஏற்படுத்துவதிலேயே அதிக நேரத்தை செலவிட்டார்கள். சில நாட்களுக்கு பின்பு, இந்தச் சம்பவம் போதகருடைய செவிகளிலே எட்டியது. போதகர், அவர்கள் இருவரையும் அழைத்துப் பேசினார். இருவரும் தங்கள் தங்கள் ஆதங்கங்களைக் கொட்டினார்கள். கர்த்தரும் எங்களோடு இருக்கின்றார் என்றும் கூறினார்கள். போதகரோ அவர்களை நோக்கி: பிள்ளைகளே, உங்கள் வாழ்க்கையிலே சாட்சிகளை தேடும் நேரம் இது அல்ல. இது இயேசுவை தேடும் நேரம். நீங்கள் உங்கள் இச்சைகளின்படி சண்டைகளைச் செய்துவிட்டு, உங்கள் பிரிவினைக்குள் கர்த்தரையும் சேர்த்துக் கொள்வது என்ன? நீங்கள் தேவன் தங்கும் ஆலயமாக இருந்தால், உங்களிடமிருந்து வரவேண்டிய வேத வசனங்களின் சத்தம் எங்கே? உங்களில் ஒலிக்க வேண்டிய துதிபலி சத்தம் எங்கே? உங்களிடம் இருந்தோ யுத்தத்தின் இரைச்சல் அல்லவா ஒலிக்கின்றது" என்று கூறினார். போராட்டத்தின் நாட்களிலே, தேவன் கொடுத்த வல்லமையான ஆயுதங்களை விட்டுவிடாதிருங்கள். மாம்சத்தின் இச்சைகளை மேற்கொள்ளும்படி வேதத்தை வாசியுங்கள், கருத்தோடு ஜெபியுங்கள், தேவ ஆலோசனைக்குக் கீழ்ப்படியுங்கள் என்று அறிவுரை கூறினார்.

**கலாத்தியர் 5:16**

ஆவிக்கேற்றபடி நடந்து கொள்ளுங்கள், அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள்.

**ஜெபம்**: சமாதானத்தின் தேவனே, ஒருவரை ஒருவர் பட்சித்து அழிந்து போகாமல், உம்முடைய வசனத்தின் சத்தமும், துதியின் ஜெயத்தொனியும் எப்போதும் என்னில் இருக்கும்படிக்கு என்னை பெலப்படுத்தி நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நற்சாட்சிகளாயிருப்போம்

ஒரு மனிதன் குறிப்பிட்ட ஒரு கம்பனியிலே வேலையை பெறும்படியாக, நேர்முகத்தேர்வுக்கு சென்றிருந்தான். இரண்டு நேர்முகத்தேர்வுகளிலும் சித்தியடைந்ததால் இப்போது அவனைக் குறித்து, காரியங்களை உறுதிப்படுத்தும்படி இரண்டு சாட்சிகளை தரும்படி அங்கிருந்த முகாமையாளர் கேட்டிருந்தார். அந்த மனிதனும் இரண்டு சாட்சிகளின் பெயர்களை அந்த முகாமையாளரிடம் கொடுத்தான். அந்த சாட்சிகளில் ஒருவர், இந்த மனிதனுக்கு உதவி செய்யும்படிக்கு, “உன்னைப் பற்றி எப்படியாக நான் கூற வேண்டும்” என்று கேட்டார். அந்த மனிதனுக்கு வேலை நிச்சயமாக தேவையாக இருந்தது. எனினும், “ஐயா, உங்களிடம் அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு நீங்கள் என்னைப் பற்றி அறிந்ததை உள்ளபடியே சொல்லுங்கள்” என்று பணிவுடன் கூறினார். ஏனெனில் அந்த மனிதன் தன்னிடத்தில் இல்லாததொன்றை தனக்கு சாட்சி பகருகின்றவர்கள் கூறுவதை விரும்பவில்லை. ஒருவருடைய வாழ்வில் நடைபெற்ற ஒரு சம்பவத்தை அல்லது அவர்கள் அறிந்த ஒரு சம்பவத்தை, உள்ளதை உள்ளபடி கூறுவதை சாட்சி என்று வர்ணிக்கப்படுகின்றது. நடைபெற்ற சம்பவத்தோடு இன்னும் சில காரியங்களை சேர்த்து மிகைப்படுத்துவதும் அல்லது அந்த சம்பவத்தின் கருப்பொருளை மாற்றும்படி நடந்த சம்பவத்திலுள்ள சில காரியங்களை மறைத்து வைப்பதும் உண்மையான சாட்சியல்ல. எங்களுடைய வாழ்க்கையிலே நாங்கள் யாரை குறித்த சாட்சிகளை கூறுகின்றோம்? நாங்கள் மற்றவர்களைக் குறித்து சாட்சி கூறுகின்றோம். தேவனைக் குறித்து சாட்சி கூறுகின்றோம். அது மட்டுமல்ல எங்களைக் குறித்தும் நாங்கள் சாட்சிகள் கூறுகின்றோம். அவை யாவும் தேவன் முன்னிலையில் நற்சாட்சியாக (கூறுவதில் உண்மை) இருக்க வேண்டும். நற்சாட்சியாய் இல்லாத யாவும் பொய் சாட்சியாகவும் அது தீமையினால் உண்டானதாயுமிருக்கும். எனவே நாங்கள் ஒருவருக்கு சாட்சியாக இருக்கும்படி சம்மதம் தெரிவித்தால், முகத்தாட்சண்யம் செய்யாதடிக்கு எச்சரிக்கையாக இருக்க வேண்டும். தேவன் பொய்ச்சாட்சியை வெறுக்கின்றார். ஆதலால், உள்ளதை உள்ளதென்றும் இல்லாததை இல்லாததென்றும் கூறுவோம்.

**மத்தேயு 5:37**

**உள்ளதை உள்ளதென்றும், இல்லாததை இல்லாததென்றும் சொல்லுங்கள் இதற்கு மிஞ்சினது தீமையினால் உண்டாயிருக்கும்.**

**ஜெபம்:** உண்மையுள்ள தேவனே, நீர் பொய்களில் பிரியப்படுகின்றவர் அல்லர். நான் எப்போதும் உண்மையைப் பேசும் சாட்சியாக இருக்கும்படிக்கு என்னை பெலப்படுத்தி வழிநடத்தும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

ஞாயிறு | மார்கழி 22

📖 மாலை வாசகம் – சங்கீதம் 103:1–2

# நன்றியுள்ளவர்களாக இருங்கள்

"என்னம்மா அயலில் வசிக்கும் அந்த மனிதன் மாடி வீட்டிலே இருக்கின்றான், ஆளுக்கொரு மோட்டார் வண்டிகளை வைத்திருக்கின்றார்கள், நல்ல வசதியாக வாழ்கின்றார்கள், ஆனால் எங்கள் வீட்டில் அடிப்படைத் தேவை சந்திக்கப்பட்டதை குறித்து நீங்கள் சாட்சி கூறுகின்றீர்களே" என்று தன் அறிவுக்கு எட்டியபடி இளைய மகன் கூறிக்கொண்டான். தாயார் அந்த மகனை அழைத்து: நீ உண்ணும் உணவுகளை வேண்டுவதற்கு யார் பணம் கொடுக்கின்றார்? மறுமொழியாக அவன் "அப்பா" என்று கூறினான். உனக்கு பாடப்புத்தகங்கள், உடுத்தும் ஆடைகள், அணியும் சப்பாத்துக்கள், நீ உறங்கும் உன்னுடைய பாய் போன்றவற்றை யார் வாங்கிக் கொடுத்தார்கள் என்று தாயார் கேட்டதற்கு, "அப்பா தான்" என்று மகன் பதில் கூறினான். அந்த அப்பாவை நீ நேசிக்கின்றாயா? ஆம் அம்மா, எனக்கு என் அப்பாவிலே நல்ல நேசம் இருக்கிறது என்றான். அப்படியென்றால், அவருக்கு எப்போதாவது நன்றி சொல்லுகின்றாயா என்று கேட்டாள். இல்லை அம்மா, ஒரு நாளும் அப்படி நினைத்ததுமில்லை கூறியதுமில்லை, ஆனால் இனி நிச்சயமாகக் கூறுவேன் என்றான். நல்லது, அந்த அப்பாவை எங்களுக்கு கொடுத்த எங்கள் பரம தந்தைக்கு நாங்கள் எவ்வளவு நன்றியாக இருக்க வேண்டும் என்று தாயார் கூறினாள். "உங்களைப் போல அன்புள்ள அம்மாவை தந்தததிற்கு நான் என் தேவனுக்கு நன்றி கூறுவேன்" என்று அந்த சின்னப்பையன் பதிலளித்தான். ஆம் பிரியமானவர்களே, தங்கள் வாழ்க்கையில் நன்மை எங்கே இருந்து வந்தது என்று தெரியாமல் வாழும் அயலவர்களைக் குறித்து அலட்டிக் கொள்ளாமல், தேவன் எங்கள் வாழ்க்கையில் செய்த உபகாரங்களை நாங்கள் மற்றவர்கள் மத்தியிலே சாட்சியாகக் கூறவேண்டும். அவை சிறிய காரியங்களாக இருக்கலாம் அல்லது பெரிய காரியங்களாக இருக்கலாம், மனதாரக் கூறப்படும் நற்சாட்சியில் தேவன் பிரியப்படுகின்றார். ஒரு வேளை அதை கேட்கும் சிலருக்கு இவை அற்பமாக இருக்கலாம், ஆனால் ஏக்கத்தோடு இருக்கும் வேறு சிலரை எங்கள் சாட்சிகள் பக்திவிருத்தியடையச் செய்யும். எனவே, உண்மை மனதோடு, எங்களைத் தாழ்த்தி, சபை நடுவிலே எங்கள் சாட்சிகள் வழியாக தேவனைப் போற்றுவோம்.

**சங்கீதம் 22:22**

**உம்முடைய நாமத்தை என் சகோதரருக்கு அறிவித்து, சபை நடுவில் உம்மைத் துதிப்பேன்.**

**ஜெபம்:** அன்பின் பரம தந்தையே, ஒவ்வொரு நாளும் நீர் எனக்கு காட்டும் அன்பை, ஆதரவை நான் உண்மை மனதுடன் மற்றவர்கள் மத்தியிலே பகிர்ந்து கொள்ளும்படிக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கர்த்தருடைய சாட்சிகளின் வழி

இயேசு சொன்னார்: என்னைக்குறித்து நானே சாட்சிகொடுத்தாலும், என் சாட்சி உண்மையாயிருக்கிறது. ஏனெனில் நான் எங்கேயிருந்து வந்தேனென்றும், எங்கே போகிறேனென்றும் அறிந்திருக்கிறேன். என்னை அனுப்பின பிதா தாமே என்னைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறார். (யோவான் 8:14, 5:37,39) தேவனுடைய சாட்சிகளின் வழியில் நடப்பது என்பதன் பொருள் என்ன? தேவன், தாம் யார் என்பதைக் குறித்து வெளிப்படுத்திக் கூறியிருக்கும் வேத வாக்கியங்களே அவருடைய சாட்சிகளாக இருக்கின்றது. அந்த சாட்சிகள் சத்தியமுள்ளது. அவை எங்களுக்கு நித்திய வாழ்வடையும் வழியை காண்பிக்கும் கட்டளைகளாகவும், வாக்குத்தத்தங்களாகவும் இருக்கின்றது. எடுத்துக் காட்டாக "**நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன் என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில்வரான்.**" "**நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான், அவன் உள்ளும் புறம்பும்சென்று, மேய்ச்சலைக் கண்டடைவான்.**" "**இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமாகிய சர்வவல்ல மையுள்ள கர்த்தர்: நான் அல்பாவும், ஓமெகாவும் ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன்**" இவைகள் யாவும் தேவனாகிய கர்த்தர் தம்மைக் குறித்து கூறும் சத்தியமுள்ள சாட்சிகளாக இருக்கின்றது. மேலும் இயேசு கூறுகையில் "வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள் அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே". என்றார். வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்து, அதன் வழியிலே நடந்த தேவ மனுஷர்கள் அந்த சாட்சிகளின் வழி யில் மனத்திருப்த்தி அடைந்தார்கள். "திரளான செல்வத்தில் களிகூருவது போல, நான் உமது சாட்சிகளின் வழியில் களிகூருகிறேன்." என்று சங்கீதக்காரன் பாடினார். ஏனெனில் திரளான செல்வத்தினால் அடைய முடியாத நித்திய ஜீவனை அவருடைய சாட்சிகளின் வழியிலே நாங்கள் கண்டடைகின்றோம். எனவே அவருடைய சாட்சிகளைக் கைக்கொண்டு, எங்கள் முழு இருதயத்தோடும் அவரைத் தேடுவோம்.

**சங்கீதம் 119:2**

அவருடைய சாட்சிகளைக் கைக்கொண்டு, அவரை முழு இருதயத்தோடும் தேடுகிறவர்கள் பாக்கியவான்கள்.

**ஜெபம்**: சர்வ வல்லமையுள்ள தேவனே, நீர் கட்டளையிட்ட சாட்சிகள் நீதியும், மகா உண்மையுமானவைகள். அவைகளை என் முழு இருதயத்தோடும் கைக்கொண்டு நடக்க எனக்கு கிருபை செய்வீராக இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

செவ்வாய் | மார்கழி 24 | 📖 மாலை வாசகம் – லூக்கா 24:45–49

# இயேசுவின் சாட்சிகள் நாங்கள்

இயேசுவுக்கு நாங்கள் சாட்சிகளாக வாழ்வது என்பது, அவருக்காக மற்றவர்களுடன் வழக்காடுவது அல்ல. கர்த்தராகிய இயேசு தாமே, இந்த பூவுலகத்தைவிட்டு பரலோகத்திற்கு எழுந்தருள முன்பு, வேத வாக்கியங்களை அறிந்துகொள்ளும்படி தம்முடைய சீஷர்களுடைய மனதை அவர் திறந்து அவர்களை நோக்கி: எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து பாடுபடவும், மூன்றாம்நாளில் மரித்தோரிலிருந்தெழுந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது. அன்றியும் மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகலதேசத்தாருக்கும் என்னுடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது என்றும், நீங்கள் இவைகளுக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள் என்று கூறினார். அவர்களோ தங்கள் மரணபரியந்தமும், இயேசுவின் சாட்சிகளாக இருந்தார்கள். சுவிசேஷத்தின் நிமித்தம் நிந்தைகளையும் அடிகளையும் கட்டுகளையும் காவலையும் அநுபவித்தார்கள், கல்லெறியுண்டார்கள், வாளால் அறுப்புண்டார்கள், பரீட்சைபார்க்கப்பட்டார்கள், பட்டயத்தினாலே வெட்டப்பட்டு மரித்தார்கள், செம்மறியாட்டுத் தோல்களையும் வெள்ளாட்டுத் தோல்களையும் போர்த்துக்கொண்டு திரிந்து, குறைவையும் உபத்திரவத்தையும் துன்பத்தையும் அநுபவித்தார்கள் உலகம் அவர்களுக்குப் பாத்திரமாயிருக்கவில்லை அவர்கள் வனாந்தரங்களிலேயும் மலைகளிலேயும் குகைகளிலேயும் பூமியின் வெடிப்புக்களிலேயும் சிதறுண்டு அலைந்தார்கள். பரமபிதாவின் சித்தத்தை நிறை வேற்றும்படிக்கு அவர்கள் உன்னதத்திலிருந்து வரும் பரிசுத்த ஆவி யின் பெலத்தினால் தரிப்பிக்கப்பட்டார்கள். தேவனானவர், அதே பரிசுத்த ஆவியானவரை எங்களுக்கும் கொடுத்திருக்கின்றார். ஆதி அப்போஸ்தலர்களைப் போன்ற பாடுகள் எங்களுக்கில்லாதிருந்தாலும், எங்களுக்கு ஏற்படும் அற்பமான பாடுகள், எதிர்ப்புக்கள், நிந்தைகள், அவமானங்களையும் வேத வார்த்தைகளின்படி சகித்துக் கொண்டு, நெருக்கடி வேளைகளிலும் தெய்வீக சுபாவங்களை வெளிக்காட்டும் உண்மையான சாட்சிகளாக கிறிஸ்துவுக்கென்று நாம் வாழ வேண்டும்.

**அப்போஸ்தலர் 1:8**

பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்.

**ஜெபம்:** பரலோக தந்தையே, நீர் எனக்குச் செய்த நன்மைகளை கூறுவதுடன் நிற்காமல், இக்கட்டான சூழ்நிலையிலும், உம்முடைய வார்த்தையின்படி நான் உம்முடைய சாட்சியாக வாழ என்னை பெலப்படுத்தும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நீங்கள் உலகத்தின் சுடர்கள்

அந்தகார இருளில் இருந்து, ஆச்சரியமான தெய்வீக ஒளிக்கு மனிதகுலத்தை வழிநடத்தும்படி, வாக்களித்த மீட்பர் வெளிப்படும்படியாய் அநேகர் தாகத்தோடு காத்திருந்தார்கள். வாக்களிக்கப்பட்ட அந்த மீட்பர் இந்த உலகிலே பிறந்த போது, அந்த நற்செய்தியை தேவ தூதன், வயல்வெளியில் தங்கி மந்தையை காத்துக் கொண்டிருந்த எளிமையான மேய்ப்பர்களுக்கு அறிவித்தான். அந்தக்ஷணமே பரமசேனையின் திரள் அந்தத் தூதனுடனே தோன்றி: **உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக என்று சொல்லி, தேவனைத் துதித்தார்கள்.** மீட்பரைக் காணும்வரை மரிக்கமாட்டாய் என்று வாக்குப்பெற்ற சிமியோனும், அன்னாள் என்னும் தீர்க்கதரிசியும் பரிசுத்த குழந்தையாகிய இயேசுவை ஆலயத்தில் கண்டு மகிழ்ந்தார்கள். பின்பு, கீழ்தேசத்திலிருந்து, நீண்ட பயணம் செய்து வந்த ஞானிகளும் அவரைக் கண்டு பணிந்தார்கள். அன்று இந்தப் பூமியிலே தோன்றிய கர்த்தராகிய இயேசுவின் பிறப்பை நினைவுகூரும் இந்த நாளிலே நீங்களும் மகிழ்ந்து களிகூருங்கள். உலகம் முழுவதும், பற்பல ஜனங்கள் இந்த நாளிலே, குடித்து, வெறித்து, உள்ளவர்களுக்கு பரிசுப் பொருட்களைக் கொடுத்து, பெரும் களியாட்டத்துடன் இந்த நாளைக் கழிக்கின்றார்கள். நாங்களோ எங்கள் மீட்பரை அவ்வண்ணமாக அறியவில்லை. ஆதியிலே வாக்களிக்கப்பட்ட மீட்பர், இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பதாக இந்தப் பூமியிலே பிறந்தார். பின்பு முன்குறிக்கப்பட்ட நாளிலே எங்களுக்குள் பிறந்தார். புதிய வாழ் வைத் தந்தார். தம்முடைய சாட்சிகளாக எங்களை நியமித்தார். அவர் எவ்வண்ணமாக எங்களை தேடிக் கண்டுபிடித்து, மீட்டுக்கொண்டார் என்ற சாட்சியை நாம் அறிவிக்க வேண்டும். உண்ண உணவின்றி உடு க்க உடையின்றி வாடிடும் வறியோருக்கு இன்னும் அதிகமாக உதவிகளை செய்ய வேண்டும். பிதாவாகிய தேவன் மனித குலத்தின்மேல் காட்டிய உன்னத அன்பை எல்லோருக்கும் தெரிவிக்க வேண்டும். உலகத்தின் வெளிச்சமாக ஏற்படுத்தப்படிருக்கின்ற நாங்கள், இந்த மகிழ்ச்சியின் நாளிலே இன்னும் அதிகமாக உலகத்தைப் பிரகாசிப்போம்.

**ஏசாயா 9:2**

இருளில் நடக்கிற ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள் மரண இருளின் தேசத்தில் குடியிருக்கிறவர்களின்மேல் வெளிச்சம் பிரகாசித்தது

**ஜெபம்:** உன்னதமான தேவனே, இந்த உலகத்தை மீட்கும்படியாக உம்முடைய திருக்குமாரனாகிய இயேசுவை எங்களுக்குத் தந்து, எங்கள் மேல் பாராட்டிய மேலான அன்பிற்காக உமக்கு நன்றி! இரட்சகர் இயேசு வழி யாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# அழைப்பின் பந்தையப் பொருள்

இன்றைய நாட்களிலே, விசுவாசிகள் மத்தியிலே உண்டாகும் பலவித மான அநாவசியமான கருத்து வேறுபாடுகளால் பலர் குழப்பமடைந்து போய்விடுகின்றார்கள். உள்ளான மனிதன் நாளுக்கு நாள் புதிதாக்க பட வேண்டும் என்னும் கருப்பொருளை மறந்து, அவசியமற்ற தர்க்க ங்களை உண்டு பண்ணி, சகோதரருக்கிடையிலே, சபைகளுக்கிடையி லே பிரிவினைகளை ஏற்படுத்தி, தங்கள் கரு த்துக்களே சரி என்று நியாயப்படு த்துவதில் அதிக நேரங்களை செலவி டுகின்றார்கள். பிரியமான சகோதர சகோதரிகளே, தேவனுடைய சித்தத்தை இந்தப் பூமியிலே நிறைவேற்றும்படிக் காய் பந்தைய பொருளின் மேல் கண் களை வைத்து அதை நோக்கி ஓடுங் கள். உதாரணமாக, ஒரு சாரார், இயேசு பிறந்த தினத்தை நினைவு கூர்ந்து கொண்டாடுவது தவறு என்று கூறி வருகின்றார்கள். ஆனால், பெரிய வெள்ளியை சந்தோஷத்தோடு கொண்டாட வேண்டும் என்றும் கூறித்தி ரிகின்றார்கள். இவைகளின் தார்ப்பரியம் என்ன? ஒரு கிறிஸ்தவனின் நாளாந்த வாழ்க்கையில் பரிசுத்தமும், பயபக்தியும் வேதம் கூறும் அடிப்படையான அம்சங்கள். இந்த உலகத்திலுள்ள தேவனை அறி யாத ஜனங்களைப் போல எந்த ஒரு நாளிலும் நாங்கள களியாட்டத் தில் ஈடுபடுகின்றவர்கள் அல்லர். நாங்கள் கிறிஸ்துவுக்குள் களிகூரு கின்றவர்கள். எனவே கிறிஸ்து இந்தப் பூமியிலே பிறந்த நாளை பரி சுத்த அலங்காரத்தோடு மகிழ்ந்து கொண்டாட வேண்டும். கிறிஸ்து இந்த உலகத்தில் பிறந்ததின் நோக்கத்தையே மையப்பொருளாக கொண்டி ருக்க வேண்டும். அது ஒரு மகிழ்சியின் நாள்! அதுபோலவே, இயேசு வின் பாடுகளையும் மரணத்தையும் நினைவுகூரும் போது, அவருக்காக நாங்கள் அழுது புலம்புகின்றவர்கள் அல்லர். மாறாக, அவர் எங்க ளுக்காக எத்தனை அகோரமான பாடுகளைப் பட்டார். எத்தகைய மர ணத்தை ஏற்றுக் கொண்டார் என்பதை தியானித்து, நன்றியுள்ள இருத யத்தோடு, அவருடைய பாடுகளின் நோக்கம் எங்களில் நிறைவேறு ம்படி பயபக்தியுடன் அந்த நாட்களை அனுசரிக்கின்றோம். எனவே வேற்றுமையான உபதேசங்களுக்கு இடங்கொடுத்து, முடிவில்லாத தர்க்கங்களில் சிக்குண்டு, மனச் சமாதானத்தை இழந்து போகாமல் ஒவ்வொரு நாளையும் பரிசுத்தத்தோடு அனுசரிப்போம்.

**பிலிப்பியர் 3:14**

கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொ ருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்

**ஜெபம்**: பரிசுத்தமுள்ள தேவனே, நான் தேவ சாயல் அடைய வேண்டும் என் னும் கிறிஸ்துவின் உபதேசத்தில் தரித்திருக்கவும், அவசியமற்ற தர்க்கங்களில் சிக்கிக் கொள்ளாதபடிக்கும் என்னை காத்துக் கொள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# இருதயத்தைக் காத்துக் கொள்ளும்

சக்கரை வியாதியின் அறிகுறிகள் தென்படுகின்றது, இப்போது வைத்தியரிடம் போனால், எனக்கு விருப்பமான எத்தனையோ உணவு வகைகளை உண்ண வேண்டாம் என்று கூறிவிடுவார். சற்று உடற்பயிற்சி செய்வோம். கை வைத்தியங்களை பார்ப்போம் என்றும் தங்கள் உண்மை நிலையை வைத்தியர் கூறிவிடுவார் என்ற பயத்தினாலும், வைத்தியரை சந்திப்பதற்கு காலதாமதம் செய்பவர்கள் பலர் இருக்கின்றார்கள். நோயின் அறிகுறி தென்படும் போது, அதை முழுமையாக சோதனை செய்து, மருத்துவ ஆலோசனைகளைப் பெற்று, தகுந்த காலத்தில் வைத்தியம் செய்ய வேண்டும் என்ற உணர்வு அற்றவர்களாக, நோய் நன்றாக அவர்களை பிடித்துக் கொள்ளும்வரை தங்கள் இஷ்டப்படி அநேகர் வாழ்கின்றார்கள். அதாவது, ஆரோக்கியமான வாழ்விற்குரிய ஆலோசனைகளையும், வைத்திய முறைமைகளையும் தேவையான நேரங்களிலே பெற்றுக் கொள்வதற்கு பதிலாக சாட்டுப் போக்குகளை கூறிவிடுகின்றார்கள். இது சில மனிதர்களுடைய மதியீனம். இவ்வண்ணமாகவே எங்கள் உள்ளான மனிதனில் ஏற்படும் நோயின் அறிகுறிகளைக் குறித்தும், நோய்களைக் குறித்தும் பலர் உணர்வற்றவர்களாக இருந்து விடுகின்றார்கள். சிலருடைய வாழ்க்கையிலே வன்மம், பகை, முரண்பாடுகள் ஏற்படும்போது, வேதத்தை வாசித்தால் அதன்படி நான் கீழ்ப்படிந்து, விட்டுக்கொடுத்து ஒப்புரவாக வேண்டும். தேவ செய்திக்கு செவிகொடுத்தால் நான் நினைத்தபடி காரியங்களை செய்ய முடியாது. தேவ ஆலோசனையை முறைப்படி கூறுபவர்களிடம் பேசினால், என் மனத்திருப்தியடையும்படி இரண்டு வார்த்தைகள் பேச முடியாது என்று, தங்கள் மாம்ச இச்சைகள் நிறை வேறும்வகையில், தேவனுடைய வார்த்தைகளை தங் கள் இருதயங்களை விட்டு அப்புறப்படுத்தி விடுகின்றார்கள். இப்படியான துணிகரமான பாவங்களுக்கு நாங்கள் உட்படாமல், பெரும் பாதகத்திற்கு தப்பிக் கொள்ளும்படிக்கு உணர்வுள்ள இருதயத்தைத் தந்து எங்களைக் காத்துக் கொள்ளும்படிக்கு தேவனை வேண்டிக் கொள்வோம்.

**சங்கீதம் 19:13**

துணிகரமான பாவங்களுக்கு உமது அடியேனை விலக்கிக்காரும், அவைகள் என்னை ஆண்டு கொள்ளஒட்டாதிரும் அப்பொழுது நான் உத்தமனாகி, பெரும்பாதகத்துக்கு நீங்கலாயிருப்பேன்.

**ஜெபம்**: பரிசுத்தமுள்ள தேவனே, எந்த சூழ்நிலையிலும், நான் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யாதபடிக்கு, உமது வாக்கை என்னிருதயத்தில் எப்போதும் வைத்திருக்கும்படிக்கு என்னை உணர்வுள்ளவனா(ளா)க்கும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பரம பிதா நேசிக்கின்றார்

ஒரு மனிதனானவன் தன் மனைவியையும், ஐந்து பிள்ளைகளை யும் அழைத்து குடும்ப நிலையைப் பற்றி பேசிக் கொண்டிருந்தான். நாங்கள் எந்தெந்த விடயங்களில் தவறுகின்றோம், அதனால் குடும்ப முன்னேற்றம் எப்படியாக பாதிக்கப்படுகின்றது என்று பன்மையிலே பேசிக் கொண்டிருந்தார். யாவரும் மௌனமாக இருந்து கேட்டுக் கொண்டிருந்தார்கள். அதன் பின்பு, மூத் தவன் எங்கே தவறினான், அடுத்தவன் எங்கே முன்னேற வேண்டும் என்று கூற ஆரம்பித்ததும், அங்கே கலரவம் தொடங்கியது, தம்பி அப்படி செய் ததால் நான் இப்படி செய்தேன், அண் ணன் இதை செய்யாததால் நான் அதைச் செய்யவில்லை என்று தங்கள் நிலைமையை நியாயப்படுத்த ஆரம்பி த்தார்கள். இந்த சம்பவத்தை சற்று சிந் தித்துப் பாருங்கள். "நாங்கள் பாவி களும் துரோகிகளுமாயிருந்தோம்" என்று பன்மையில் கூறுவதற்கு விசுவாசிகள் யாவரும் ஆயத்தமுள்ள வர்களாக இருக்கின்றார்கள். "நான் பாவியும் துரோகியுமாயிருந்தேன்" என்று ஒருமையில் பேசுவதை பொதுவாக விசுவாசிகள் விரும்புவ தில்லை. அதே போலவே, எங்கள் சபை ஐக்கியம் வளர்ச்சியடையு ம்படி எங்களில் இருக்கும் குறைகள் என்று ஒரு ஊழியர் பேசினால் யாவரும் கேட்டுக் கொண்டிருப்பார்கள். ஆனால், ஒருவனைப் பார்த்து, நீ அல்லது உன்னுடைய மனைவி அல்லது உன்னுடைய பிள்ளைகள் என்று தயவாய் கூப்பிட்டு, தனிப்பட்ட ரீதியில் கூறினாலும் அதை ஏற் றுக் கொள்ள மறுத்து விடுவார்கள். அந்த விசுவாசியை பாருங்கள், இந்த மனிதனைப் பாருங்கள், அவனுடைய பிள்ளைகளைப் பாருங்கள் என்று பெரிதான பிரச்சனைகளை ஆரம்பித்து விடுவார்கள். கர்த்தர் தான் நேசிக்கின்றவர்களை கடிந்து கொண்டு சிட்சிக்கின்றார். எங்க ளிலோ அல்லது எங்கள் குடும்பத்திலோ ஏதாவது தவறு இருக்குமா யின், அதைத் சுட்டிக் காட்டும் போது திருத்திக் கொள்வது எங்களுக் கு நல்லது. மற்றவன் கீழ்ப்படிவற்ற வாழ்க்கை வாழப் போகின்றேன் என்று தீர்மானம் செய்திருந்தால், அவனை நோக்கிப் பார்க்காதிருங் கள். எங்கள் பரமதந்தை தான் நேசிக்கின்றவர்கள் இன்னும் அதிக கனி களை கொடுக்கும்படி அவர்களை தினமும் பரிசுத்தப் படுத்துகின்றார்.

**வெளிப்படுத்தல் 3:19**

நான் நேசிக்கிறவர்க ளெவர்களோ அவர்களைக் கடிந்துகொண்டு சிட்சிக்கிறேன். ஆகையால் நீ ஜாக்கிரதையாயிருந்து, மனந்திரும்பு.

**ஜெபம்**: அன்பின் பரம பிதாவே, உம்முடைய சிட்சையை அற்பமாக எண்ணாமல், உம்முடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து மனந்திரும்பத்தக் கதாக என்னை உணர்வுள்ளவனா(ளா)க்கும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# உங்களை ஆராய்ந்து பாருங்கள்

வருட இறுதியின் கடைசி மாதத்தில், கம்பனியில் வேலை பார்க்கும் யாவரும் ஆண்டின் ஆரம்பத்தில், தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட பொறுப்பை அவரவர் நிறைவேற்றி முடிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் உசார் நிலையில், கருத்தோடு வேலை செய்தார்கள். விற்பனை பிரிவில் வேலை செய்பவர்கள், இந்த ஆண்டில் தாங்கள், தங்கள் இயக்குனருக்கு கொடுத்த வாக்கின்படி முன் குறித்த இலக்கை எப்படியாவது அடைய வேண்டும் என்று பிரயாசப்பட்டார்கள். கம்பனியின் நிர்வாகிகள், கம்பனியின் செயற்பாடுகளும், வரவு செலவுகளும், இலாபமும், அந்தக் கம்பனியின் சொந்தக் காரருக்கு வருட ஆரம்பத்தில் கொடுத்த முன் அறிக்கையின்படி, சட்டபூர்வமாக சிறப்பாக நடத்தி முடிக்கப்பட்டது என்று கூறும்படிக்கு அதிகமாக செயற்பட்டார்கள். இப்படியாக எல்லா கம்பனிகளும், அமைப்புக்களும் தங்கள் செயற்பாடுகளையும், முக்கியமாகப் பொருளாதார நிலைமையையும் குறித்து கரிசனையுடன் கணக்குப் பார்க்கின்றார்கள். இவை யாவும் இந்த உலகத்துடன் முடிந்து போகின்ற காரியங்களாக இருந்தாலும், சிரத்தையுடன் அதை கணக்கொப்புவிக்கும்படிக்கு இரவு பகலாக உழைக்கின்றார்கள். அப்படியானால், அழியாத நித்தியமான ராஜ்யத்திற்கென்று அழைக்கப்பட்ட நாங்கள் எப்படியாக உழைக்க வேண்டும் என்று சிந்தித்துப் பாருங்கள். ஒரு நாள், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும். அந்த நாள் வரைக்கும் எப்படியாவது வாழ்வோம் என்றிருக்காமல், அவ்வப்போது எங்கள் நிலைமையை நாங்கள் ஆராய்ந்து பார்த்து, கர்த்தருடைய வாக்கின்படி எங்கள் வாழ்க்கையை மாற்றிக் கொள்வது நல்லது. வருட தொடக்கத்திலே, நாங்கள் எங்களுடைய உள்ளான மனிதன் எப்படியாக இருந்தான். இப்போது எவ்வளவாய் புதிதாக்கப்பட்டிருக்கின்றது? தேவனை அறிகின்ற அறிவிலே நான் முன்னேறியிருக்கின்றேனா? என் வாழ்வின் சமாதானம் பெருகியிருக்கின்றதா? பிரியமானவர்களே, இது நியாயத்தீர்ப்பின் காலம் அல்ல. இது தேவ கிருபையின் காலம்! எனவே தைரியத்துடன் உங்கள் நிலையை ஆராய்ந்து பார்த்து கர்த்தர் அண்டையிலே சேருங்கள்.

**புலம்பல் 3:40**

**நாம் நம்முடைய வழிகளைச் சோதித்து ஆராய்ந்து, கர்த்தரிடத்தில் திரும்பக்கடவோம்.**

**ஜெபம்:** இரக்கமுள்ள தேவனே, இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங்கிருபையை அடையவும், இந்நாட்களிலே நான் என்னை ஆராய்ந்து பார்த்து உம் அண்டை சேர வழிநடத்தும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# சுவையான புதுக் கனிகள்

ஒரு மனிதன் தன் பண்ணையின் ஒரு பகுதியில் செவ்விளனீர் கன்றை நாட்டி நன்றாக பராமரித்து வந்தான். குறித்த பருவத்திலே அந்த மரத்தில் ஒரு குலை செவ்விளனி காய்த்தது. அந்த பருவத்துடன் அந்த மரத்தில் எந்த செவ்விளனியும் காய்க்கவில்லை. அந்த மனிதனும், எருக்களைப் போட்டு, ஒரு செவ்விளனி மரம் காய்ப்பதற்கு வேண்டிய எல்லாவற்றையும் செய்து பார்த்தான் ஆனால் ஆண்டுகள் கடந்தும் அந்த மரத்தில் எந்த செவ்விளனியும் காய்க்கவில்லை. "அட இந்த மரம் முதல் பருவத்தில் காய்த்தது தானே, எனவே அவன் அந்த மரம் அப்படியே இருக்கட்டும்" என்று விட்டு விடுவானோ? குறிப்பிட்ட காலத்திற்குள் அதை தறித்து விடுவான் அல்லவோ! கிறிஸ்தவனின் வாழ்க்கையானது பருவத்தில் கனி கொடுக்கும் மரத்தைப் போன்ற வாழ்க்கையே. வெப்ப காலத்திலும் தாழ்ச்சியில்லாமல் கனி கொடுக்கும் வாழ்க்கை. பத்து வருடங்களுக்கு முன்பு அந்த சகோதரன் இப்படியாக எனக்கு கெடுதி செய்தான், அவனை நான் மன்னித்து விட்டேன் என்று கடந்த காலத்திலே நடந்த ஒரு நற்கிரியையை கூறிக் கொண்டே இருப்பது, ஒரு பருவத்தில் காய் காய்த்து ஒய்ந்து போன செவ்விளனி மரத்திற்கு ஒப்பான வாழ்க்கையாகவே இருக்கும். எனவே பழைய கனிகளினாலே நாங்கள் திருப்தியடைந்து விட முடியாது. ஒரு மரமானது அதன் கனிகளினாலே அறியப்படுவது போல, எங்கள் வாழ்க்கையிலும் நாங்கள் கொடுக்கும் கனியினாலே நாம் அறியப்படுவோம். போன வருடத்தில் நான் தேவனுக்குப் பிரியமானவனாக வாழ்ந்து வந்தேன், ஆனால் இந்த வருடத்திலே அப்படி வாழ முடியவில்லையே என்று கடந்த வருடத்தின் அறிக்கையை நாம் பற்றிக் கொண்டிருக்கலாகாது. இந்த வருடத்தின் கணக்கில் பின்னடைவு ஏற்பட்டிருந்தால், குற்ற உணர்வினால் சோர்ந்து போய்விடாதிருங்கள். உங்களையே நீங்கள் நியாந்தீர்த்து பின்வாங்கிப் போய்விடாதிருங்கள். கணக்கு பார்ப்பதன் நோக்கம் அதுவல்ல. குறைவுகள் இருப்பின் அவை நிறைவாகத் தக்கதாகவும், நற்கனிகளை கொடுப்பவர்கள் இன்னும் அதிகமாகக் கொடுக்கத் தக்கதாகவும். பரம பிதா எங்களில் மகிமைப்படும்படியாகவும், இயேசுவின் சீஷர்களாக நாங்கள் வாழும்படிக்கு எமது கணக்கானது பார்க்கப்படல் வேண்டும்.

**யோவான் 15:8**

நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள்.

**ஜெபம்:** பரிசுத்தமுள்ள தேவனே, கடந்ததும், முடிந்து போனதுமான பழைய காரியங்களிலே நான் திருப்த்தியடையாமல், இன்றும் எப்போதும் உமக்கு பிரியமான நற்கனிகளைக் கொடுக்க என்னை வழிநடத்திச் செல் வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

செவ்வாய் | மார்கழி 31 | 🕮 மாலை வாசகம் – ஏசாயா 40:11

# இதுவரை நடத்திய தேவன்

நாட்கள், மாதங்கள், ஆண்டுகள் மாறிக் கொண்டு போகின்றது. தேச த்தின் ஆட்சிகளும் மாறிப் போகலாம். புல்லின் பூவைப் போல மனி தனுடைய நாட்களும் முடிந்து போகின்றது. எங்களை சுற்றியிருக்கின்ற மனிதர்கள் மாறிப் போகலாம். நாங்களும் அந்த மாற்றங்களுக்கு விதிவிலக்கானவர்கள் அல்லர். ஆனால் இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராக இருக் கின்றார். கடந்து செல்லும் இந்த ஆண் டைத் திரும்பிப் பாருங்கள்! எங்கள் தேவன் எப்படியாக எங்களோடு கூட இருந்தார் என்று சற்று சிந்தித்துப் பாருங்கள். நல்ல தகப்பனைப் போல, தேற்றும் தாயைப் போல, வழிடத்தும் நல்ல மேய்ப்பனைப் போல எங்களை வழிநடத்தி வந்தார். இஸ்ரவேல் ஜன ங்களை வனாந்திரத்தில் வழிநடத்திச் சென்றது போல, இன்றைய உலக த்தில், ஒரு மனிதனானவன் தன் பிள்ளையைச் சுமந்து கொண்டு போவதுபோல, இந்நாள் வரைக்கும், நடந்து வந்த வழிகள் எல்லாவற் றிலும், எங்கள் தேவனாகிய கர்த்தர் எங்களைச் சுமந்து கொண்டு வந்தார். ஒருவனை அவன் தாய் தேற்றுவதுபோல் நான் உங்களைத் தேற்றுவேன் என்ற வாக்குத்தத்தத்தின்படி அவர் உண் மையுள்ளவ ராக இருந்து எங்களைத் தேற்றுகின்றார். ஆட்டுக்குட்டிகளைத் தமது புயத்தினால் சேர்த்து, தமது மடியிலே சுமந்து கறவலாடுகளை மெதுவாய் நடத்துவார் என்ற பிரகாரமாக தம் மேய்ச்சலின் ஆடுக ளாகிய எங்களுக்காக தம் உயிரையே கொடுத்த நல்ல மேய்ப்பனா கிய இயேசு, எங்கள் நிலைமையை நன்றாக அறிந்து அதன் பிரகார மாக எங்களை வழிநடத்தி வந்தார். தாவீது ராஜா கூறியது போல, கர்த்தராகிய ஆண்டவரே, தேவரீர் என்னை இதுவரைக்கும் கொண்டு வந்ததற்கு, நான் எம்மாத்திரம்? என் வீடும் எம்மாத்திரம்? என்று கூறியது போல நாங்களும் இந்நாளிலே எங்கள் தேவனாகிய கர்த் தருக்கு மனதார நன்றி செலுத்த வேண்டும். அவருடைய அநாதி தீர்மானத்தின்படி, எங்களை முன் குறித்த தேவன், அப்பா பிதாவே என்று கூப்பிடும்படியான பெரிதான சிலாக்கியத்தை எங்களுக்கு கொடுத்தார். இதுவரை நடத்தி வந்த தேவன், மகிமையிலே அவரைத் தரிசிக்கும் நாள்வரை எங்களைக் காத்து வழிநடத்துவார். ஆமேன்!

**2 சாமுவேல் 7:18**

**கர்த்தராகிய ஆண்டவரே, தேவரீர் என்னை இதுவ ரைக்கும் கொண்டுவந்த தற்கு, நான் எம்மாத்தி ரம்? என் வீடும் எம்மா த்திரம்?**

**ஜெபம்:** இதுவரை நடத்தி வந்த அன்புள்ள பிதாவே, நீர் எங்களோடே கூட இருக்கின்றீர் என்பதை உணர்ந்து கொள்ளும்படிக்கு பிரகாசமுள்ள மனக் கண்களை தந்து எங்களை வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# அன்பான வாசகர்களுக்கு!

**'உள்ளான மனிதன்'** பிரதியை பெற்றுக் கொள்ளுங்கள்!

உள்ளான மனிதன் சஞ்சிகையின் **மென்பிரதியை** எங்கள் இணையத்தளத்தில் வாசிக்கலாம். அத்துடன் அனுதின தியானம் என்ற தலைப்பின் கீழ், ஒரு **தனிப்பட்ட இணைய -த்தள பக்கமும்** பதிவேற்றப்பட்டுள்ளது. புத்தகங்களை தபால் மூலம் பெற்றுக்கொள்ள, உங்கள் முகவரியை, மின்-அஞ்சல் ஊடாகவோ, அல்லது தொலைபேசி ஊடாகவோ எங்களுக்குத் தெரியப்படுத்தலாம். அல்லது அடுத்த பக்கத்தி லுள்ள விண்ணப்பப் படிவத்தில் உங்கள் விபரங்களை பதிவு செய்து, எங்கள் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

மாதாந்தம் இந்த சஞ்சிகையை வாசித்த பின்பு மற்றவர்களு டனும் பகிர்ந்து கொள்ளுங்கள். கூடுமானவரை, தேவனை அறியாதவர்களுடன் இதனை பகிர்ந்து கொள்ளுங்கள். தேவ -னுடைய ஜீவ வார்த்தைகள், அந்தந்த நாளுக்கு மட்டுப்படுத் தப்பட்டவைகளல்ல.

தற்போது கிறிஸ்தவ ஆவிக்குரிய ஐக்கியமொன்றிலும் இணைந்திருக்காவிட்டால், எங்களுடன் சேர்ந்து தேவனை ஆராதிக்கும்படியாக உங்களை வரவேற்கின்றோம்.

**தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக் கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வள வாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்**. (யோவான் 3:16)

**கிருபையின் கூடாரம் அப்போஸ்தல சபை**

**ரொரன்ரோ, கனடா ☎ 416.613.2909**

## இலவசம்

உள்ளான மனிதன் மாதாந்த பிரதி

# விண்ணப்பப் படிவம்

முழுப் பெயர் FULL NAME:

முகவரி ADDRESS:

நகரம் CITY:

தபால் குறியீடு POSTAL CODE:

மாநிலம் PROVINCE:

தொலைபேசி TELEPHONE:

மின் அஞ்சல் E-MAIL:

விண்ணப்பப் படிவம் அனுப்பப்பட வேண்டிய முகவரி

**THE INNER MAN – GTAC**
**7700 MARKHAM ROAD**
**P. O. BOX 3052**
**MARKHAM, ON L3S 4T1**

MAIL THE APPLICATION FORM TO THE ABOVE MENTIONED ADDRESS

gtachurch.ca

gtachurch.ca